177

ஸர்வதாரி ஞூ ஆடி மீ

ஸம்புடம்-7 ஸஞ்சிகை-7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JUL 1948
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

July 1948
Vol. 7 No. 7

விஷய ஸூசிகை.

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	170
2.	அர்ச்சையும் ஆலய ப்ரவேசமும் ...	177
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	188
4.	அர்ச்சாவதார தத்வம்	189
5.	திருப்பாவை	192
6.	செய்திகள்	194
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	195
8.	வாஸந்திகா பரிணயம்	

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

——::O::——

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வதாரி ஸூ ஆனி மீ	ஸஞ்சிகை 7

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

OFFICE OF THE REGISTRAR OF B...
20 JUL 1948
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீநரஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

பித்ரோர்வசநபாலநம் ப்ரதிஜ்ஞாய ராஜ்யாபிஷேகத்யாகம்—அயோத்யா காண்டம் முழுவதற்கும் இது ஒன்றுதான் பணிப்பு. இந்தக் காண்டத்தில் யுத்தம் கிடையாது.

'நாஹமர்த்தபரோ தேவி' 'வித்தி மாம் ருஷிபிஸ்துல்யம் கேவலம் தர்மமாஸ்திதம்' என்று ராமன் கைகேயினிடம், 'நான் ராஜ்யத்தில் ஆசையுடையவ னல்லேன்; ருஷிகளைப்போல் நான் கர்மங்களைத் துறந்து தர்மத்தையே ஆசரித்துத் தபோ வநத்தை விரும்புகிறவன்' என்று கூறியதை ஸ்வாமியும் வ்யஞ்ஜநம் செய்து, 'ருணகாதபோவந ஸம்ப்ரவேசிதா' என்று ஆரண்ய காண்டத்துக்கு அவதாரணம் செய்யும் ரஸம் ரஸிக்கத்தக்கது. பிறகு ராமன் ராஜ்யத்தைத் துறந்து வநம் சென்றார்.

'நிஶ்சித்ய ஸசிவை: ஸார்த்தம் யௌவராஜ்யமமந்யத।'

'ததோ ராஜ்யம் பரிஷ்வஜ்யோஸ்ஸேந யௌவராஜ்யே ஸமாத்யதி।'

என்று பிதாவால் நிச்சயிக்கப்பட்டபோது, ராஜ்யாபிஷேகத்தை 'யௌவராஜ்ய' என்ற பதத்தால் ஸூசிக்கிறார். அது பிதாவின் உள்மனம். காட்டுக்குச் செல்ல நேர்ந்தது அவர் 'வசநம்'. அவருடைய 'வசநத்தை' ஸத்யமாக்கிப் பரிபாலநம் செய்யவேண்டியதால், ப்ரஜாபரிபாலநத்தை விட்டுப் பித்ருவசந பரிபாலநம் செய்ய நேர்ந்தது. பிதாவின் உயிரைப் பரிபாலநம் செய்வதற் கில்லாமல், அவர் வசநத்தைப் பரிபாலநம் செய்யவேண்டிய தாயிற்று ராமனுக்கு. 'வச நபரிபாலந' என்பதில் இந்த ரஸங்கள். பரதனுடைய ஶரணாகதியை யும், பித்ருவசந பரிபாலந வ்ரதத்தினுல் அவர் கதறிக் கெஞ்சிய ராஜ்ய பட்டாபி ஷேகத்தையும் தள்ளவேண்டியிருந்தது. அயோத்யா காண்டம் முற்றிலும், ராஜ்ய பட்டாபிஷேகத்தைத் தள்ளித் தபோவநம் செல்வதே முக்ய கதை. 'பித்ரோ' என்பது, ஏகஶேஷத்தால் 'கைகேயியான மாதாவும் பிதாவும்' என்று பொருள் தரும்.

'வநம் ப்ரவேக்ஷ்யாமி' 'மாதா பித்ருப்யாம் ப்ரதிஜ்ஞாதம் கர்தவ்யம் தத்ஸமாசர' என்று 104-ம் ஸர்க்கத்தில் பரதனிடம் சொல்வதும் ஸூசிக்கப்படுகின்றது.

'ஸத்யம் ஹி வசநம் ராஜ்ஞ: வசநம் பாலயே।'

'தத்ஸ்மரந் வசநம் தேவி ராஜ்ஞோ யதாவிதாம்ஸ்திதம்।'

முதலிய ச்லோகங்கள் பித்ருவசந ப்ரதிஜ்ஞை. தகப்பனார் வசநம் இன்னதென்று தெரிவதற்கு முன்பே, அவர் வசநம் எதுவாயிருந்தாலும் அதன்படி நடப்பதாக ராமனுடைய த்ருட ப்ரதிஜ்ஞை.

“ 𑌪𑍁𑌰𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌨𑌃 𑌸 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌤𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍 ।
𑌮𑌾𑌤𑌾𑌮𑌹𑍇 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑍌𑌷𑍀𑌦𑍍 𑌰𑌾𑌜𑍍𑌯𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 । ”

என்று (107-ம் ஸர்க்கத்தில்) தசரதர் கைகேயியை மணம் புரியுமுன் அவள் தகப்பனாரிடம், அவள் பிள்ளைக்கு ராஜ்யம் தருவதாக ராமன் எடுத்துக்காட்டிய பித்ருவசநமும் இங்கே ஸூசிக்கப்படுகிறது. மறுபடியும் ராஜ்யாபிஷேகம் செய்துகொள்ளத் தசரதரை எதிரே நிறுத்தி, அவருடைய ‘வசநம்’ நேரும்படி மஹாதேவர் கட்டளை செய்தார். அதையே அரும் பெரும் ‘ப்ரஸாத’ மாகப் பெருமாள் நினைத்துப் பதினாலு வர்ஷங்கள் ஸீதா லக்ஷ்மணர்களோடு வநத்தில் வஸித்து வநவாஸ ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றினார்.

‘ 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾 𑌸𑌫𑌲𑌾 𑌕𑍃𑌤𑌾 । ’
‘ 𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌿𑌸𑍍𑌸𑌹 𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌥𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌰𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 । ’

என்று கூறினார். ‘ தீர்க்காயுஷ்மானாக இருக்கவேண்டும்; தீர்க்க காலம் ராஜ்ய பரிபாலநம் செய்யவேண்டும்’ என்கிற பித்ருவசநத்தை ஸத்யமாக்கவே, ராமன் பதினோராயிரம் வர்ஷங்கள் ராஜ்ய பரிபாலநம் செய்தார் போலும். மஹா தீர்க்காயுஷ்மானான அறுபதினாயிரம் வயஸ்ஸுள்ள தசரதர் வாயால் ‘ 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 ’ என்ற ஆசீர்வாதத்துக்கு ஒரு பதினாயிரம் வர்ஷமாவது இருக்கவேண்டாமோ? ‘𑌶𑌤𑌾𑌯𑍁𑌃 𑌵𑍈 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’ என்ற வேத வசநத்தினும் பித்ருதேவர் வசநம் பெரிது.

𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌤𑌪𑍋𑌵𑌨𑌜𑌙𑍍𑌗𑌮𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍇𑌨 — கண்ணன் கோகுலத்தில் கோபர்களோடு வஸித்தார். அவர் அங்கே வஸித்தது 11-பிராயம் வரையில். **ராமன் யௌவநத்தில் ராஜ்யத்தை விட்டு வநம் சென்று ரிஷிகளோடு வஸித்தார். அயோத்தியை விட்டு ராமன் வநத்துக்குப் புறப்படுகையில், தாயான** கௌஸல்யை மங்களங்கள் பாடி வாழ்த்தினாள். சித்ரகூடம் சென்று வஸிக்கையில் (116-வது ஸர்க்கத்தில்) தண்டகாரண்யத்தில், ராமன் சித்ரகூடம் எழுந்தருளியதை அறிந்து, ரிஷிகள் ராவணன் தம்பியான கரன் என்னும் ராக்ஷஸன் தமது சரீரங்களைப் பலவிதமாய் ஹிம்ஸித்துப் பக்ஷணமும் செய்வதாக முறையிட்டுத் தண்டகாரண்யத்திற்கு வரவேணுமென்று ராமனிடம் விண்ணப்பித்தார்கள். ரிஷிகள் ஸ்வஸ்த்யயநம் செய்ய,

‘ 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌰𑌣𑍍𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ’

என்று (ஆரண்யகாண்டம் முதல் ச்லோகத்தில் கூறியபடி) ராமன் தண்டகா வந ப்ரவேசம் செய்து, அங்கே தாபஸாச்ரம மண்டலத்தையே ஸேவித்துக் கொண்டார். ‘𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌤𑌪𑍋𑌵𑌨 ’ என்று இங்கே ஆரண்யகாண்டாரம்பத்தில் முதல் ச்லோகத்தை ஸூசிக்கிறார். ‘𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍’ என்று

மஹர்ஷியான கவி, அந்த அரண்ய ரிஷிகள், மனிதரைக் கொல்லும் புருஷாதமரான ராக்ஷஸர்கள், ஸிம்ஹம் புலி முதலிய கொடிய ஜந்துக்கள், எல்லோருக்கும் வாஸம் தருவதை வர்ணித்தார். அந்த வநத்தில் ஸர்வபூத ஶரண்யன் ப்ரவேஶித்ததை அநுபவித்தார். 'ஶரணார்த்தம்' என்று ருஷிகள், ராமனிடம் ஶரணம் புகுந்தார்கள். ராமனும் அவர்களுடைய தபோவநங்களில் ஶரணம் புகுந்தார் (வஸித்தார்). 'நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாமாபந்நாநாம் பரா கதி:' என்று ராமனைத் தாரை வாலியினிடம் வர்ணித்தாள்.

வ்ருக்ஷம் ஸ்தாவரமாகும். இந்த வ்ருக்ஷம் ஜங்கமமாக நடந்து போகிறது. தேவதேவனாகிய இந்த வ்ருக்ஷம் பாரிஜாதமென்னும் திவ்ய கல்பக வ்ருக்ஷம். இது கேட்டதையெல்லாம் அளிப்பது மின்றிக்கே, ஆச்ரித விரோதிகளைக் கொல்லும் வ்ருக்ஷம். பாரிஜாதம் முதலிய கல்பக வ்ருக்ஷங்களுக்கு அந்த ஶக்தி கிடையாது; அவை ஸஞ்சாரமும் செய்யமாட்டா. அயோத்யா நகரத்திலிருந்து தண்டகா தபோவநங்களுக்கு மஹர்ஷிகளின் ஸஹவாஸத்தில் ஆசையால் நடந்துவந்த தேவ வ்ருக்ஷம் இது. ரிஷிகளின் ஆச்ரம மண்டலங்களில்

"உஷித்வா தத்ர ஸுகம் தத்ர பூஜ்யமானோ மஹர்ஷிபி: ।
ஜகாம சாச்ரமாம் தேஷாம் பர்யாயேண தபஸ்விநாம் ॥"

[மஹர்ஷிகளால் ஸத்காரம் செய்யப்பட்டு ஸுகவாஸம் செய்துகொண்டு ஒவ்வொரு ரிஷியின் ஆச்ரமத்துக்கும் சென்று சென்று மாஸக் கணக்காகப் பத்து வர்ஷகாலம் வாஸம் செய்தார்.] என்று கூறியதை ஸூசிக்கிறார். பகவானை 'வாஸுதேவ தரு' என்பர். வ்ருக்ஷங்களும் சேதநம். அவை ஸர்வாத்மாவான ராமனுக்குப் பந்து. வ்ருக்ஷங்களுக்கும் ப்ரிய பந்துவான பாரிஜாத வ்ருக்ஷம் இது. 'மாயக்கூத்தா'வில் ஆழ்வார்,

"................ கண்ணு கண்கை கால்
தூய செய்ய மலர்களா சோதிச் செவ்வாய் முகிழதா
சாயல் சாமத் திருமேனி தண்பா சடையா தாமரைநீள்
வாசத் தடம்போல் வருவானே யொருநாள் காண வாராயே."

என்று பகவானை நடக்கும் தடாகமாக அநுபவித்தார்.

கர தரு கர தரு வந்த அநவஸதந.— தண்டகாரண்யத்தில் ஸாதுக்களைக் கொல்லும் 'கரன்' என்னும் ஒரு ஜங்கம வ்ருக்ஷம் இருந்தது. 'கர' என்பதற்குக் 'கொடிய' என்பது பொருள். கரன் கொடியவன். இப்பெயர்மட்டும் அவன் செய்கைக்குப் போதாதென்று, 'கரதரன்' என்கிறார். 'கர: கரதரோ கர:', 'கர: கரதரம் வத:' என்றார் ரிஷி. இந்தக் கொடிய ராக்ஷஸ வ்ருக்ஷத்தை அழிப்பதற்கே ராமன் தண்டகா தபோவநத்துக்கு ஜங்கம பாரிஜாதமாக வந்தது. புயல் காற்று அரண்யத்தில் வ்ருக்ஷங்களைத் தள்ளி அழிப்பது இயற்கை; அதுபோல ராமன் கரனை முடித்தார். இவ்விடத்தில் 'யதாஞ்ஞாகாரோ ஹிரிவொத்தித:' 'மஹாசேவ இவ' என்பவை

ரிஷியின் உபமாநங்கள். 'சின்னமூல இவ த்ரும:' [வேரறுந்த வ்ருக்ஷம் போல் விழுவாய்] என்று ராமன் கரனிடம் கூறியதை அநுஸரித்து 'வ்ருக்ஷ' என்கிறார்.

> " நாததாநம் ஶராந்கோராந் விமுஞ்சந்தம் ஶிலீமுகாந் ।
> ந கார்முகம் விகர்ஷந்தம் ராமம் பஶ்யாமி ஸம்யுகே ॥
> ஹந்யமாநம் து தத்ஸைந்யம் பஶ்யாமி ஶரவ்ருஷ்டிபி: ।
> இந்த்ரேணேவோத்தமம் ஸஸ்யமாஹதம் த்வஶ்மவ்ருஷ்டிபி: ॥"

[ராமன் வில்லை வளைப்பதும் இழுப்பதும் தெரியவில்லை. ராமன் இருக்குமிடமே தெரியவில்லை. ராமனே தெரியவில்லை. இந்த்ரனால் மேலிருந்து கல்மாரிகள் பெய்து நல்ல தாங்யப் பயிர்கள் அழிந்து போவனபோல, ஶரவர்ஷத்தால் ராக்ஷஸ ஸேனைகள் மடிந்து விழுவதுதான்தான் தெரிகிறது] என்று சூர்ப்பணகை வர்ணித்தாள். புயல்காற்று கண்ணுக்குத் தெரியாது. மரங்கள் முறிந்து விழுவதுதான் கண்ணுக்குப் புலப்படும். 'வேரற்ற மரம்போல் விழுவாய்' என்று ராமனே கூறியதற்கேற்ப, வேரோடு அறுத்துத் தள்ளும் சண்டமாருதமாக இங்கே வர்ணநம். சண்டமாருத வேகமாக இருந்தது ஶரங்களின் வேகம்.

த்விஸப்தரக்ஷஸ்ஸஹஸ்ர நளவநவிமர்தந ஹாஸ்திகஸைந்யேந.— தண்டகாரண்யத்தின் நடுவில் பதினாலாயிரம் நாணல் செடிகள் அடங்கிய ஒரு காடு. கல்மாரிகள் தாங்யப் பயிர்களை அழிப்பனபோல அந்த நாணல் காட்டை மிதித்து அழிக்கிறது ராமவேழம்.

> " நளவநமிவ வ்ருக்ணம் நாவபாஶம் நிதாந்தம்
> ஶரஜவஸமிதி நத்வே ஶஸ்த்ரஹஸ்தேவ தீவ்யந் "

என்பது தேவநாயக பஞ்சாஶத். இவ்யானை கோதாவரீ ஸமீபத்தில் பாபாஶிகளாகிய நாணல் காட்டை அழித்தது. ஆற்றங்கரைப் படுகையில் நாணல் காடு இருக்கும். அதிவேகமாய் ஒரு முஹூர்த்த காலத்தில் ஒருவராலேயே அக்காடு அழிக்கப்பட்டது. அத்தனைக்கும் ஒரு யானை போதும். ஒரு புயல் காற்றுபோதும்.

உபசிதஸஹாஸ்யஶஸ்த்ர ஸஸேமிர்ஷி ஶ்ருத தந்வமிரம்ஹணவிமோசித விகட விரவ ஹேந.—'ஸ்த்ரியம் பராஷவிஹ ஹழ' என்று பரிஹாஸத்தில் ஸந்தேஹம் போலக் கேட்ட உத்தம க்ஷத்ரிய ஸ்த்ரீ பார்த்து மகிழவேண்டும். நாதனைக் கட்டி அணைக்கவேண்டும். அதுவே அவன் வெற்றிக்குப் பரிசு. ஸ்ரீ ராம ஜயத்தை ராஜர்ஷிகளும் பரமர்ஷிகளும் கூடிப் புகழ்ந்தார்கள். தேவர்களும் சாரணர்களும் கூடித் துந்துபி முழங்கிப் புஷ்பம் வர்ஷித்தார்கள். அது போதுமா? ஓஷதிபோல் தாயாரான பூமியிலிருந்து உத்பந்நையான ஸீதையின் அணைப்பு, ஸஞ்ஜீவி மூலிகையைப் பிழிந்து தடவியதுபோல வீர வ்ரணங்களை

உடனே ஆற்றின. 'விரொவி தவிகூடவிர வண' என்பதால், மூலிகை வ்ரண மாற்றும் கார்யத்தைச் செய்வதுபோல், ஸீதையின் அணைப்பு வ்ரணம் ஆற்றுவதைக் காட்டுகிறது. 'திருமுலைத் தடங்களாலே ஒத்தடம் கொடுத்தாள்.' உத்தர ராம சரிதம் 3-வது அங்கத்தில், ஸீதையின் ஸ்பர்ஶத்தை 'ஸஂஜீவ நௌஷயிரஹொ நூ ஹ்ருதி ஹ்ருஸிக்தஃ' என்று பவபூதி கவி, மூர்ச்சித்திருந்த ராமன் வார்த்தையாக வர்ணித்தார். 'யஂஅஹ்ருஷா உரிஷ்ஜெகு' என்று சூர்ப்பணகை இந்த அணைப்பை நேரில் பார்த்ததை ராவணனிடம் கூறினாள். 'இந்த ஸ்வயம் க்ரஹம் இன்பம் யாருக்குத்தான் கிடைக்கும்?' என்று இவளுக்கு அஸூயை. 'வீரஸ்ரீ இருக்க, அதன்மேலே ஸ்வத: ஸ்ரீயானவள் பரிஷ்வங்கம்' என்பது ஸாக்ஷாத் ஸ்வாமி உரை.

ஊரீவிஊயாஊ ஹஅஉவரிகூஊ தமிஹஶஊ ஹஊ ஸ்ஹணெந — ராமன் இரண்டு தடவை மாரீசனைக் கொல்லாமல் விட்டுவிட்டு மூன்றாம் தடவை கொன்றார். 'வெஜாஜிநகூபெரா த்தரழ' என்பது கீதை. தர்ப்பங்களின் பேரில் மான்தோல் விரிப்பு; அதன்பேரில் வஸ்த்ரம். 'ஊயா' என்பது ஆச்சர்யமான அமைப்பைச் சொல்லும். 'ஸ தூ ரஷவஂ ஸஊாத்ரய உஹஊஹ்தூ தஶஊநழ।' என்ற வர்ணநத்தை 'ஊயா' என்பதால் ஸூசிக்கிறார்.

'ர த்நஊயழ। உூக்தாஊணிவிதிராஂஹஂ ரஷவ்யா தூ தநஎரூஹழ'

'அந்த மாரீச ராக்ஷஸனே இந்த மான் வேஷம் பூண்டவன். அந்த மாயாவி இந்த மாயா ம்ருக ரூபத்தைக் கொண்டிருக்கிறான். இது கந்தர்வக் கோட்டை போன்றது. ஊயெஷா ஹி ந ஸஂஶயஃ' என்ற லக்ஷ்மண வசநமும் இதனால் ஸூசிக்கப்படுகிறது. 'சுஹொரஎவஂ' 'சுஹொ ஶக்ஷீஃ' 'உயிரோடு பிடித்தால் ஊர் கொண்டுபோய்ப் பரதருக்கும் மாமிகளுக்கும் காட்டலாம். உயிரோடு பிடிக்க இயலாவிடில் அழகிய இத்தோலைத் தர்ப்பாஸநத்தின் பேரில் விரித்து அதில் உட்கார ஆசைப்படுகிறேன்' என்றாள் ஸீதை. ராம பாணம் உடலில் தைக்கவே, மாரீசன் மான் ரூபத்தை விட்டு ராக்ஷஸ ரூபத்தை அடைந்து விழுந்து மடிந்தான். மேலிருந்த மான் ரூபமுள்ளதோல் பொய்யில்லாத வஸ்துவா யிருக்கலாம். 'ஹிஹஊர'—ஸ்வர்ண மான் தோலும் பூர்ணமான நல்ல விரிப்பாயிற்று.

'ஊரீசூ தநூஂ த்ரஜ்ய ஸவிக்ரூப ஸ்வரொபஹஎவகெய ஶரயர ஸ்வராக்ஷஸஃ' மாரீசன் தோலை எறிந்துவிட்டு ராக்ஷஸ ரூபத்தைத் தரித்தான்; பாணம் உள்ளேயுள்ள ராக்ஷஸ ஶரீரத்தையும் கொன்றது. ஶததூஷணியின் 39-ம் வாதத்தில் 'மாயை' என்பதன் பொருளை விசாரிக்கையில்,

'ஊயாஊஹொவிஊரீஅஹ்ருஷிரெவஹிதாஊரஶீ।
நஜெஉ்ராஊஶரெணாஹ்ய நியநஂ நொவவஊ்யெதெ।

என்று மேலே மான் தோலும் மாரீசனால் உண்மையாக ஆக்கப்பட்டதே என்று கூறப்பட்டது.

க்ருத்ரராஜஸ்ய ஹ்ருதய[illegible]—இதனால் 'க்ருத்ரராஜ [illegible] மதம்' என்ற ராம வசனத்தை ஸூசிக்கிறார். 'ததாஹ ராமோ யதாஶாஸ்த்ரம் ஸ்வபந்துமிவ து:கித: ।' என்றபடி ஜடாயுஸ்ஸுக்கு ராமன் தம் உறவினரைப் போல் தஹந ஸம்ஸ்காரங்கள் செய்தார்.

'மஹர்ஷிகல்பேந ச ஸம்ஸ்க்ருதஸ்ததா ஜகாம புண்யாம் கதிமாத்மநஶ்ஶுபாம்'

[மஹர்ஷி போன்ற ராமனால் மஹர்ஷிகளை ஸம்ஸ்காரம் செய்யும் ப்ரஹ்ம மேத ஸம்ஸ்கார கல்பத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டது என்பது கருத்து.] 'மஹர்ஷிகல்பேந' என்பதற்கு 'மஹர்ஷி போன்ற ராமனால்', 'மஹர்ஷிகளை ஸம்ஸ்காரம் செய்யும் ப்ரயோகத்தால்' என்று இரண்டு பொருள்களையும் கொள்ளலாம்.

ராமன், ராவணனை ஸம்ஸ்கரிக்கும் விஷயத்தில் 'க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ' என்று பேசினார். 'விபீஷணா! நீ ஸம்ஸ்காரம் செய்கிறாயா? அல்லது நான் செய்யட்டுமா? பக்தனாகிய உனக்கு அவன் எப்படித் தமையனோ அப்படியே எனக்கும் அவன் தமையன்' என்பது ராமன் பேச்சு. 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று பேசுபவர். பக்தன் தமையனான ராவணன் விஷயத்திலும் அப்படிப் பரிவு. பித்ரு ஸகாவாய்த் தனக்காகப் போர் புரிந்து உயிரை விட்டவர் ஜடாயுஸ். ஶரீரத்தை விட்டவருக்கு நித்யமான ஆத்ம வாழ்வை அளித்தார்; பரமாத்ம கதியைத் தந்தார்; உயிரை நித்ய வாழ்வையுடைய உயிராக்கினார். 'கச்ச லோகாநநுத்தமாந்' என்று ஜ்யோதிர் வாக்யத்தில் ப்ரஹ்ம ஜ்யோதிஸ்ஸால் தீப்தமான அநுத்தமமான உத்தம மோக்ஷபோகம் குறிக்கப்பட்டது. அந்த அநுத்தமமான மோக்ஷ லோகத்தை ஜடாயுஸ்ஸுக்குக் கொடுத்தார்.

ஸ்வபாதாஶ்ரித[illegible]—பக்த ஜநத்துக்கு மோக்ஷமளித்ததையும், பக்த ஜநத்தின் தேஹத்தை ஸம்ஸ்காரம் செய்ததையும் முன்பு கூறினார். இதில் தம்மை ஆச்ரயித்துப் பஜநம் செய்பவருக்குத் தாமே மோக்ஷ ஸித்தியைப் பெறச் செய்யும் மஹிமை பக்த ஜநத்துக்கே உண்டு என்கிறார்.

ஶபரீ என்பவள் வந மாநுஷீ. அவள் பகவத் பஜநமென்னும் பக்தி யோகத்திற்கு அதிகாரி யல்ல. பக்தரான முநி ஜநத்தைப் பஜநம் செய்தாள். அவர்களைப் பஜிப்பதில் அவளுக்கு அதிகாரம் உண்டு என்று ரஸம். அவர்களைப் பஜநம் செய்தால் மோக்ஷ ஸித்தியில் ஸம்ஶயமே யில்லை. முநி ஜநங்களைப் பஜநம் செய்வதின் மஹிமை அவந்த்யம். ஒருகாலும் அது வீண் போகாது.

'ஸித்திர்பவதி வா நேதி ஸம்ஶயோ'ச்யுதஸேவிநாம் ।
ந ஸம்ஶயோ'ஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம் ॥'

என்கிற ச்லோகத்தை 'சுஸ்ரூஷ ஸஹிஸ' என்பதால் ஸூசிக்கிறார். ஆசார்யரான மதங்க முநியைப் பஜநம் செய்ததால், அவளுக்கு மநோ மலங்களெல்லாம் நீங்கி மோக்ஷ யோக்யதை கிடைத்தது. 'ஸ்வாஷிதஹ்ருதயகலுஷ—ஹ்ருதய க்ரந்திகளெல்லாம் தொலைந்தன. ஶபரியின் மோக்ஷம் அவளுடைய ஆச்சார்ய பஜநத்தாலேயே கைவந்து விட்டது. ராமன், அவள் மோக்ஷம் செல்வதில் கேவலம் ஸாக்ஷீ பூதரே.

'ஶ்ரூதம் ப்ரத்யக்ஷமிச்சாமி ஸந்த்ருஷ்டம் யதி மந்யஸே'

[ஆசார்ய பஜநத்தால் உனக்குக் கிடைத்த மோக்ஷ ஸித்தி மஹிமையை நான் நேரில் ஸாக்ஷாத்தாகப் பார்க்க ஆசைப்படுகிறேன்] என்ற ராம வசநத்தை 'ஸாக்ஷீ பூத' என்பதால் ஸூசிக்கிறார். ஆசார்யோபாஸநத்தால் நிச்சயமாய் மோக்ஷ ஸித்தி பெறும் ஸாமர்த்யம் 'ஶ்ரமணீம் தர்மநிபுணாம்' என்று ஸங்க்ஷேப ஸர்க்கத்தில் 'நிபுணமான தர்ம முடையவள்' என்பதால் காட்டப்பட்டது. அவள் தேஹத்தை அவளே அக்நியில் ஸம்ஸ்கரித்து விட்டாள். அந்த ச்ரமத்தை ராமனுக்குக் கொடுக்க அவளுக்கு இஷ்டமில்லை போலும். இங்கே ஆரண்ய காண்டம் முடிகிறது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஓர் ஸுபாஷிதம்

"பஶ்யதி பரஸ்ய தோஷாந் ஸதோऽபி நைவ குணாந் । விபரீதமிதம் ஸ்வஸ்மிந் ஸஹிதோ மோஹாத் ஜநஸ்ஸர்வ: ॥". ஸாதாரணமாக, இருக்கும் பொருள்களே நமக்குப் புலப்படுகின்றன; இல்லாதவை புலப்படமாட்டா. இதற்கு விருத்தமாக இருக்குமவை புலப்படாமலும் இல்லாதவை புலப்பட்டும் இருக்கும் ஸ்தாநமொன்று உண்டு. அந்த ஸ்தாநம் எதுவென்றால்:— நம்மிடம் இல்லாத குணங்களை இருக்கின்றனவென்றும், இருக்கும் தோஷங்களை இல்லையென்றும் நினைக்கின்றோம். 'இது ஸொந்த விஷயத்தில். பிறருடைய விஷயத்தில், இல்லாத தோஷங்களை இருக்கின்றனவென்று க்ரஹிக்கிறோம்; இருக்கும் குணங்களைப் பார்க்கிறோமில்லை. இது இந்த உலகத்தில் தென்படும் ஆச்சர்யங்களுக்கு ஒரு பெரிய ஆச்சர்யமன்றோ? ப்ராயேண ஜநங்கள் இவ்விதமாகவே க்ரஹிக்கிறார்கள் ஜகத் விலக்ஷணனான ஸ்ரீ ராமசந்திரனிடத்திலேவென்றால் "ஸ்வதோஷபரதோஷவித்" என்று ஸொந்தவிடத்தில் இருக்கும் தோஷங்களை அவன் அறிகிறவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் "ஸ்வதோஷவித்" என்பது முதலில் போடப்பட்டிருக்கிறது என்பது கனிக்கத்தக்கது. தனது தோஷங்களே அவனுக்கு முதலில் காணப்படுகின்றன என்பதை ஸூசிப்பிக்கவன்றோ ஸ்ரீ வால்மீக இப்படி அநுக்ரஹித்திருக்கிறார்?

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அர்ச்சையும் ஆலய ப்ரவேசமும்

[ஒரு வேதாந்த வித்யார்த்தி – ந்யாயஶிரோமணி]

[பம்பாய் ஸ்ரீ. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி எழுதின வ்யாஸத்துக்கு மறுப்பு]

"விசார்யம் வித்வத்பிர் நீயம் யத்நம் விபுதஜநதா விசாரக்ஷணே ।
பஹுச்சித்ரே தஸ்மிந் விபுதா: விசாரோ விஸம்ஶயோ பவதி ॥"

என்கிற கணக்கிலே, நிகழும் ஆனி மாதம் ஸ்ரீ 'ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்ரிகையில் "அர்ச்சாவதாரமும் சுபாச்ரயத்வமும்" என்கிற தலைப்பின்கீழ்ச் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் முன்பின் விருத்தங்களாயும் ஸ்ரீ பாஷ்யாதிகளில் பரிசய மில்லாதவர்களாலே எழுதப்பட்டவைகளாயும் தோற்றுவதால், இந்த வ்யாஸத்தைப் புத்திமான்களான நம் ஸம்ப்ரதாயஸ்தர்கள் பலவாறாகக் கண்டிக்கவேண்டு மென்றும் அதைப் பார்த்து ஒருவரும் ப்ரமிக்கக்கூடா தென்றும் முதலிலே கேட்டுக்கொள்ளப் படுகிறது.

'இதில் ஒரு சாரார்' என்றாரம்பித்து, "பஞ்சமர்கள் தேவாலயங்களில் ப்ரவேசித்ததின் காரணமாக அவைகள் அசுத்தப்பட்டுவிட்டதால், எந்த ஶாஸ்த்ரம் தேவாலயங்களில் பகவத் ஸாந்நித்ய மிருப்பதைப்பற்றிக் கூறுகிறதோ அதே ஶாஸ்த்ரம் பஞ்சமர்கள் ப்ரவேசித்தால் ஸாந்நித்யம் போய்விடும் என்று கூறுகிறபடியால், ஸாந்நித்ய மில்லாத பிம்பத்தை அர்ச்சிப்பது ஸேவிப்பது முதலானவை தோஷமானதால் கோயிலுக்குப் போகக்கூடா தென்கிறார்கள்" என்று முதல் கக்ஷி எழுதப்பட்டிருக்கிறது. இதுவே ப்ராமாணிகமான கக்ஷி. பாஞ்சராத்ரத்தில், தேவாலயத்தில் ஶிலா ஸுவர்ண ரஜத தாம்ராதிகளாலே ஒரு விக்ரஹத்தைப் பண்ணி அதில் பகவானை ஆவாஹநம் பண்ணினால், அங்கு 'பிம்பாக்ருத்யாத்ருநா பிம்பே ஸாமதத்ராவதிஷ்டதே' என்கிறபடி, பரமபதத்தி லுள்ள பகவான் இந்த விக்ரஹத்திற்குத் துல்யமாக ஓர் அப்ராக்ருத விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு நீர க்ஷீர ந்யாயத்தாலே ஸாந்நித்யத்தை அடைகிறான் என்று ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு ஶாஸ்த்ரத்தில்

"மஹாத்மாநாஞ்ச பஹி: ஸ்தித்வா ததா ப்ராகாரகோசர: ।
ஸம்ஸாதயந்தி நாதஸந்நித்யைவ பிம்பாத் ப்ரவர்த்ததே ॥"

என்று சொல்லியிருக்கிறது. இதில் முதலில் சொன்னபடி, விக்ரஹங்களில் மஹான்களாலே பகவான் ஆவாஹநம் பண்ணப்பட்டவனைப் பரமபதத்தினின்றும் இந்த விக்ரஹத்தில் ஸந்நிஹிதனாகிறான் என்பதை ஒப்புக்கொண்டால், இரண்டாவது வசநப்படி கர்ப்பக்ரஹத்துக்கு வெளியில் நின்றே ப்ராகாரத்திற்

குள் நின்ருே சண்டாளாதிகளாலே பார்க்கப்பட்டால், பகவான் அந்த பிம்பத்தை விட்டுப் பலாயநம் பண்ணுகிருன் என்பதை எப்படி ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியும்? 'யதா ந ப்ரவ்ருத்தி: ததா ந நிவ்ருத்தி:' என்றன்ருே ந்யாயமிருப்பது? 'ஸூத்ராவித்யாதி தோஷேப்யஃ ஸஹ்ஸ்ரைஃ ஸம்ப்ரதிஷ்டிதஃ' என்கிறபடி மஹான்களாலே ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸிலாதி விக்ரஹம் தேவதையாக ஆகிறதை நம்பி அந்த விக்ரஹத்தில் தேவபுத்தி பண்ணி, தசாராதநம் அர்ச்சநம் ஸேவா ஸ்தோத்ராதிகளைப் பண்ணும் ஆஸ்திகனான ஒருவன், நீசர்களால் பார்க்கப்பட்ட மாத்ரத்தால் பகவான் ஓடிப்போகிறு னென்று வசநம் சொன்னால் அதை மாத்ரம் இல்லை யென்று எப்படிச் சொல்ல முடியும்? ராம க்ருஷ்ணுதி விபவங்களும் ஒருகாலத்தில் அவதரித்து, ஒருகாலத்தில் தன்னடிச்சோதிக்கு ஸ்வஸங்கல்பத்தாலே எழுந்தருளினதாகப் புராணுதிகளில் காண்கிறோம். அப்படியே அர்ச்சையிலும் ஆவாஹநாதிகளாலே ஸாந்நித்யத்தை யடைந்து, 'தேவோ பிம்பாதபயாதி' என்கிற ஸாஸ்த்ரத்தாலே அநுமிக்கப்பட்ட சண்டாளாதிகளால் பார்க்கப்பட்டால், 'நான் விலகிப்போகிறேன்' என்கிற தன் ஸங்கல்பத்தால் விலகிப்போகிருன் என்ருல், ஆஸ்திகர்களான நாம் அதை யப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமே தவிர அதை மறுக்க முடியுமா? வைதிகர்களான நாம் ஸந்த்யாவந்தநத்தில் 'ஆயாது வரதா' என்று காயத்ரியை ஆவாஹநம் செய்தால் அவள் வருகிருள் என்றும், ஜபம் முடிந்தபிறகு 'உத்தமே ஸிகரே' என்று உத்வாஸநம் பண்ணினால் அவள் போகிருள் என்றும், அப்படியே ச்ராத்தத்தில் ஒரு ப்ராம்ஹணன்பேரில் பித்ருக்களை ஆவாஹநம் செய்து போஜநாந்தமாக அவர்களுக்கு த்ருப்தியைச் செய்துவைத்து விஸர்ஜநம் பண்ணினால் பித்ருக்கள் வந்து போகிருர்க ளென்றும் ஒப்புக்கொண்டிருக்கிற நாம், ஒரு விக்ரஹத்தில் மஹான்களாலே ஆவாஹநம் செய்யப்பட்ட பகவான் அங்குச் சிரகாலம் ஸாந்நித்யத்தை யடைந்து, பின்பு நீசர்களுடைய ஸம்பந்தத்தால் அந்த விக்ரஹத்தை விட்டு விலகிப்போகிருன் என்ருல் என்ன ஆக்ஷேபம் சொல்ல முடியும்? ஆனால் காயத்ரியாதிகள் விலகிப் போவதற்கு நிமித்தம் உத்வாஸநாதிகள். இங்கு சண்டாளாதி ஸம்பந்தமும் அங்க வைகல்யாதிகளும், அங்க வைகல்யம் நேர்ந்தால் விலகிப்போவது ஸர்வ ஸம்மத மன்ருே? சில ஸாஸ்த்ரங்கள்,

"ஸ்வபசைஸ்ச ஸூத்ராத்யைஸ்ச ஸ்ப்ருஷ்டே சாண்டாலைஸ்ச மஹீஸுரை: ।
ப்ரோக்ஷணாதி ப்ரவிஷ்டம் தேவத்யாஸநவரணாதிகம் ததா ॥
ஸஹஸ்ரகலஸைஸ் ஸ்நபநம் ஸ்நாபயேத் தஸ்ய ஸாந்தயே ।
ப்ரோக்ஷயேத் பஞ்சகவ்யேந பஞ்சாஹுதிவிதாநயேத் ॥"

என்று சண்டாளாதி ஸம்பந்தத்திற்குச் சில ப்ராயச்சித்தங்களைச் சொல்லுகின்றன. இதனால் யதாஸாஸ்த்ரம் ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டால் பூஜார்ஹமான பகவத் ஸாந்நித்யம் அதில் உண்டாகிற தென்றும், அப்பொழுது தீர்த்த ப்ரஸாத ஸடாரி முதலானவைகளையும் அங்கு ஸ்வீகரிக்கலா மென்றும் த்யோதித மாகிறது.

சுபாச்ரயத்தில் சண்டாளாதி ஸம்பந்தம் வந்தாலும் தோஷ மில்லை யென்று சொல்லும் அதிவாதிகளுக்குப் பாத்ம பாரமேச்வர ஸ்ரீ ப்ரச்ந ஸம்ஹிதாதிகளி லுள்ள பகவானுக்கே தோஷம் நேர்ந்தால் ஸம்ப்ரோக்ஷணாதிகளைச் சொல்லும் ப்ராயச்சித்த ஶாஸ்த்ர மெல்லாம் கிழித்துப் போடவேண்டி வரும். அது இஷ்ட மென்றால் சிலர் மநுஸ்ம்ருதியைக் கிழித்துப் போடுவதுபோல் ஆகும்.

இப்படி முதல் கக்ஷியே ப்ராமாணிக மென்று நிரூபிக்கப்பட்டபடியால், "மற்றொரு சாரார்" என்றாரம்பித்து, "ஶாஸ்த்ர விஹிதமான விஷயத்தில் நம் இஷ்டம்போல் செய்யக்கூடா தென்றும், ராஜாங்கத்தாரால் செய்யப்பட்ட இந்தக் கார்யத்தால் பகவத் ஸாந்நித்யம் போய்விடா தென்றும், அதனால் பகவானுக்கு அசுத்தி ஸம்பவிக்கா தென்றும், நம்முடைய திநஸரி கார்யங்களில்கூட ராஜாங்க உத்தரவை விசேஷமாகக் கீழ்ப்படிந்து நடப்பதுபோல் இதையும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான் என்று சொல்லுகிறார்கள்" என்று சொல்கிற கக்ஷி ஶாஸ்த்ர விருத்த மென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். இதில் முதலில், ஶாஸ்த்ர விஹிதமான விஷயத்தில் நம் இஷ்டம்போல் செய்யக்கூடா தென்று ஸஹஜமாக எழுதிவிட்டு, உடனே ராஜாங்கத்தாரால் செய்யப்பட்ட இந்தக் கார்யத்தால் பகவத் ஸாந்நித்யம் போய்விடாதென்று 'தேவோऽபிம் பாத³வஹாயதே' என்று முன் சொன்ன ஶாஸ்த்ரத்திற்கு விருத்தமாகத் தன் இஷ்டப்படி சொல்வது ப்ராமாணிக மாகுமா? ஶாஸ்த்ர விருத்தமாக ஸாந்நித்யம் போகாதென்று நிர்ணயிக்க நாம் அதிகாரிகளா?

மேல்—"அதனால் பகவானுக்கு அசுத்தி ஸம்பவிக்காது" என்று எழுதியிருக்கிறது. அப்படியானால்,

"ஶ்வபசைஶ் ஶூத்ர பாஷண்டைஸ் ஸம்பாஷண்டைஶ்ச ஸஹிதைஃ ।
ப்ரவேஶாதி ப்ரவிஷ்டம் சேத் யாகாவரணமண்டபே ।
ஸஹஸ்ர கலஶைஶ்சைவம் ஸ்நாபயேத் தஸ்ய ஶாந்தயே
ப்ரோக்ஷயேத்³வம் ச பஞ்சகவ்யேந புண்யாஹம் வாசயேத்³ ॥"

பகவானுக்கே சண்டாளாதி ப்ரவேஶத்தா லுண்டான தோஷ ஶாந்தியின் பொருட்டு ஸஹஸ்ர கலஶ ஸ்நாநத்தையும் பஞ்ச கவ்ய ப்ரோக்ஷணத்தையும் புண்யாஹவாசநத்தையும் விதிக்கிற இத்யாதி ஶாஸ்த்ரங்களெல்லாம் வ்யர்த்தங்களாக ப்ரஸங்கிக்கும். இஷ்ட மென்றால் இரு கக்ஷியாரும் ஶாஸ்த்ர வச்யரென்று எழுதியிருப்பது எப்படி சரியாகும்?

மேலே—" இருவரும் ஶாஸ்த்ரத்தையே ப்ரமாணமாகச் சொல்வதாலும் " என்று எழுதியிருக்கிறது. அவர்கள் சொல்லும் ஶாஸ்த்ரம் எது ? ராஜாங்கத்தாரால் செய்யப்பட்டபடியாலேயே இந்தக் கார்யம் ஶாஸ்த்ரீயமாகுமா ? ராஜாங்கத்தார் ஆலய ப்ரவேஶ சட்டம் கொண்டுவந்து ஆலய ப்ரவேஶ ரூபமான இந்தக் கார்யத்தைச் செய்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில், ஹரிஜனங்களும் ஆலயத்தில் ப்ரவேசிக்கலா மென்றும், அதை ஒருவன் தடுத்தால் தண்டனைக் குட்படுவா னென்றும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அவர்

களால் ப்ரவேசிக்கப்பட்ட கோயில்களில் வைதிகர்களும் போய் அவச்யம் ஸேவிக்கவேண்டு மென்று சொல்லப்படவில்லையே. ஆகையால் ஆலய ப்ரவேச முள்ள கோயிலில் நாம் போகவில்லை யென்ருல், ஒரு ப்ரகாரத்தாலும் ராஜாஜ்ஞா விரோத மில்லை. இது நிற்க: மேல்—“ இவ்விஷயத்தை ஶாஸ்த்ரம் ஸம்ப்ரதாயம் சிஷ்டாசார மென்னும் மூன்றையும் கொண்டு முடிவு செய்யவேண்டும் ” என்று சொல்லிவிட்டு, “ ஶாஸ்த்ர ரீதியாக விசாரிக்குமளவில் ‘ த்வெவாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சைவாமூர்த்தஞ்ச ’ என்கிற ச்ருதிப்படி” என்று சொல்லி’ அதற்கு அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இவர் இந்த ச்ருதி வாக்யத்தை உபந்யாஸங்களில் கேட்டுத் தான்தோன்றியாய் அர்த்தம் சொல்வதுபோல் தோன்றுகிறது. அன்றிக்கே: இந்த ச்ருதி வாக்யத்தை இவர் நேராகப் பார்த்தோ, அதின் மேல் வாக்யத்தைக் கவனித்தோ, உபநிஷத் பாஷ்யங்களில் அதின் அர்த்தத்தை நன்ருக க்ரஹித்தோ எழுதினவர் அன்று. இது, ப்ருஹதாரண்யகத்தில் சதுர்த்தாத்யாய த்விதீய ப்ராம்ஹணத்தி லுள்ளது. இந்த ‘ மூர்த்த ’ ஶப்தார்த்தத்தை “ததேதந்மூர்த்தம் யதந்யத் வாயோஶ்சாந்தரிக்ஷாச்ச” என்கிற அதின் மேல்வாக்யமே விவரிக்கிறது. இதன் பாஷ்யத்தில்,

‘ வாய்வந்தரிக்ஷவ்யதிரிக்தம் பூம்யப்தேஜோலக்ஷணம்
யத் த்ரிதயம் ததேதந்மூர்த்தம் ’

என்று அந்த வாக்யத்தின் அர்த்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்மேல் ‘ அதாமூர்த்தம் வாயுஶ்சாந்தரிக்ஷஞ்ச ’ என்கிற உபநிஷத் வாக்யம், அமூர்த்த ஶப்தார்த்தத்தை வாயு அந்தரிக்ஷம் என்று வெளியிடுகிறது. அதன் பாஷ்யத்தில்,

“ அதாமூர்த்தமிதி ஸமநந்தரத்வாதேரேஷ:
ததேவாஹ வாயுஶ்சாந்தரிக்ஷஞ்சேதி ’

என்று வாய்வந்தரிக்ஷங்கள் அமூர்த்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க, இவர் தம் இஷ்டப்படி அமூர்த்த மென்ருல் திவ்யாத்ம ஸ்வரூப மென்றும், மூர்த்த மென்ருல் திவ்யமங்கள விக்ரஹ மென்றும் இந்த ச்ருதிக்கு அர்த்தம் சொல்லுகிருர். இவர் எப்படி ஆப்த ராவார்? ஆப்த வாக்ய மன்ருே ப்ரமாணம்? ஆப்த ரென்ருல் யதார்த்த தர்சியாயும் யதாத்ருஷ்டார்த்தவாதியாயும் இருக்கவேண்டு மென்பது ச்ருதப்ரகாஶிகாதி ஸித்தம். ஆகையால் தாம் எடுத்த ச்ருதிக்கு ஸரியாக அர்த்தம் அறியாமலும், அந்யதாவாகவும் அர்த்தம் சொல்லுகிற இவர் வ்யாஸம் மஹான்களுக்கு ப்ரமாண மாகாது. இதற்கு மேல் தாம் சொன்ன அர்த்தத்தை ஸித்தவத்கரித்துச் சில உபந்யாஸம் செய்கிருர். அது எவ்வளவு ப்ரமாண மென்று விசாரிப்போம்.

‘ நித்ய விபூதியில் மூர்த்தமான ஸ்ரீமந்நாராயணனும், அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானும் ஒன்றே ’ என்று எழுதுகிருர். கீழே மற்ருென்று மூர்த்தமான திவ்யமங்கள விக்ரஹம் என்று சொன்னர். இங்கு நித்ய விபூதியில் மூர்த்தமான ஸ்ரீமந் நாராயணன் என்று சொல்லுகிருர். இதைப் பார்த்தால் நாராயண ஸ்வரூபத்தையே இவர் மூர்த்த மென்று சொல்லு

கிருர்போல் இருக்கிறது. 'அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானும் ஒன்று' என்று அர்ச்சையி லிருக்கிற திவ்யாத்ம ஸ்வரூபத்தோடு மூர்த்தமான நாராயணனுக்கு ஐக்யம் சொல்வதால், ஸ்வரூபைக்யமே சொல்லுகிருர் போல் தோன்றுகிறது. அதில் ஒருவருக்கும் விவாத மில்லே. அதனுல் இவருக்கு ஒரு ப்ரயோஜநமு மில்லே. நித்ய விபூதியி லிருக்கும் மூர்த்தமான நாராயணனும் சேதநாசேதந ப்ரபஞ்சத்தி லிருக்கும் எம்பெருமானும் ஒன்றுதான். அதனுல் சேதநாசேதந ப்ரபஞ்சத்துக்கு என்ன உத்கர்ஷம் வந்துவிட்டது? அதுபோல் அர்ச்சைக்குத் தான் என்ன உத்கர்ஷம்? நித்ய விபூதி யிலிருக்கும் மூர்த்தமான திவ்யமங்கள விக்ரஹமும் அர்ச்சாவதார விக்ரஹமும் ஒன்ருவென்பதே விவாத விஷயம். அதை ஸ்தாபிக்க வந்த இவர் மூர்த்த மென்பது திவ்யமங்கள விக்ரஹமென்று முதலில் சொல்லிவிட்டு, அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தின் உள்ளிருக்கும் நாராயணனின் ஸ்வரூபத்துக்கும் அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கும் ஐக்யம் சொல்வது எப்படி ஸங்கதமாகும்? மேலும் 'நித்ய விபூதியிலுள்ள எம்பெருமானுக்கும், அர்ச்சாவதார ரூப எம்பெருமானுக்கும் வாசியில்லே என்பது நம் பூர்வாசார்யர்கள் ஸித்தாந்தம்' என்று இவர் எழுதியிருப்பதைப் பார்த்தாலும், ஸ்வரூபைக்யத்தையே நிகமித்திருப்பதால், இவர் ஸ்வரூபத்தையும் திவ்யமங்கள விக்ரஹத்தையும் பிரித் தறிந்ததாகத் தோன்றவில்லே. மேலும் இவர், ஸ்வரூபத்திற்கும் திவ்யமங்கள விக்ரஹத்திற்கும் பேதத்தைத் தெரிந்துகொள்ளாமலே உபந்யாஸம் செய்கிருர். அதை வித்வான்கள் நிரூபித்துப் பார்க்கவேணும்.

மேல்—மூர்த்தமான திவ்யமங்கள விக்ரஹத்துக்குத் தான் சுபத்வமும் ஆச்ரயத்வமும் உண்டு' என்று எழுதியிருக்கிருர். அதில் கோடுபோட்டு, "சுபத்வமாவது—எந்த அவஸரத்திலும் எவ்விதமான அசுத்தியும் ஸம்பவிக்க ஹேதுகூட இல்லாதிருத்தல்' என்று இவரே மேல் உதாஹரிக்கப்போகிற 'நித்ய விக்ரஹரான நித்யருக்கும் ஆச்ரயத்வ முண்டேயாகிலும் ஸம்ஸார நிவர்த்தந க்ஷமமான சுபத்வ மில்லே' என்கிற ஸ்ரீ தேசிக் ஸ்ரீ ஸூக்திக்கு விருத்தமாய் ப்ரக்ருதம் தம் இஷ்டத்துக்கு ஸாதகமானபடி அஸாம்ப்ரதாயிகமான ஒரு சுபத்வ பரிஷ்காரம் செய்திருக்கிருர். இவர் சொல்வது சுபத்வமானுல், நித்ய விக்ரஹரான நித்யருக்கும் சுபத்வமும் ஆச்ரயத்வமும் வர ப்ரஸங்கிக்கும். ஆகையால் இந்த பரிஷ்காரம் அதிவ்யாப்தி தோஷதுஷ்டம்.

மேல்—'நித்ய விபூதியில் எம்பெருமானுக்கு எப்படி எவ்வித அசுத்தியும் ஸம்பவிக்காதோ, அப்படியே அர்ச்சாவதாரத்திலும் அசுத்தி ஸம்பவிக்காதென்பது ஸித்தம்' என்று தாம் சொன்ன துஷ்டமான பரிஷ்காரத்தை அவலம்பித்து எழுதியிருக்கிருர். இது,

' ஸ்வஸ்ய ஸர்வாத்ரஸ்ய ப்ரஸாதாய ஸம்ஸாராஸ்ய மஹிஷஸ்ய ஃ '

என்கிற கீழ் உதாஹரித்த வசநத்தில் அர்ச்சா விக்ரஹம் சண்டாளாதி த்ருஷ்டமானுல் அதற்கு அசுத்தி ஸம்பவிக்கு மென்றும், அதன் சாந்தியின் பொருட்டு

ஸஹஸ்ர கலஶாபிஷேகம் பண்ணவேண்டு மென்றும் சொல்லியிருப்பதற்கு விருத்தமாம். ஸம்ஸார நிவர்த்தந க்ஷமத்வரூப சுபத்வம் நித்யவிபூதியி லுள்ள நித்ய விக்ரஹத்திற்கும் அர்ச்சா விக்ரஹத்திற்கும் துல்ய மென்றால் ஒரு வித விரோதமு மில்லை. அர்ச்சைக்கு இம்மாதிரி தோஷங்கள் ஸம்பவிப்பதற்கு முன் ஸம்ஸார நிவர்த்தந க்ஷமத்வரூப சுபத்வ முண்டென்றும், சண்டாளாதி தர்ஶந விஷயத்வ ரூப தோஷமும் பிறகு வரலாமென்று சொன்னால் பரஸ்பர விரோத மில்லை. பாஞ்சராத்ராதிகளில் சொல்லியிருப்பதும் இந்த சுபத்வ பரிஷ்காரத்திற்கு விருத்த மாகாது. இதனால் தன் பரிஷ்காரத்தை அவலம்பித்து, “சுபத்வம் சொன்ன பெருமாளுக்கு நேர் விரோதமாக அசுபம் ஸம்பவித்தது என்று சொல்லிவிட்டால்” என்பது முதலான மேல் சொல்லுகிற இவர் வார்த்தைகளெல்லாம் யதாவஸ்திதமான சுபத்வத்தை யறியாமல் ஸ்வச்சந்தமாகச் சொல்லப் பட்டவை என்று ஜ்ஞாபிக்கப்படுகிறது.

மேலே—‘இந்த சுபாச்ரயத்வம் பகவானின் ஸ்வரூபத்தில் அஸாதாரணமாகச் சொருகி நிற்கும் விஷயம்’ என்று எழுதுகிறார். இவர் முன்பு ‘பரமாத்ம ஸ்வரூபத்திற்கு சுபத்வ முண்டாகிலும் ஆச்ரயத்வ மில்லை’ என்று சொல்லிவிட்டு, இங்கு அதற்கு விருத்தமாக ‘சுபாச்ரயத்வம் பகவானின் ஸ்வரூபத்தில் அஸாதாரணமாகச் சொருகி இருக்கிறது’ என்று எழுதுகிறார். இவருடைய ஜ்ஞாநத்தைப் பண்டிதர்கள் பராமர்சிக்கவேணும். இதில் அவரே ஜ்ஞாபக மிருக்கவேண்டு மென்று எழுதியிருக்கிறார்.

மேல்—‘நித்யவிபூதி எம்பெருமானோடு வாசியில்லாத அர்ச்சைக்கு அசுத்தி சொன்னால், அர்ச்சையும் வைகுண்ட நாதனும்கூட பத்த முக்த நித்யர்களுக்கு ஸமமாகி விடுகிறார்கள்’ என்கிறார். இதில் ‘நித்யவிபூதி எம்பெருமானோடு’ என்கிற சப்தம் திவ்யாத்ம ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. ‘அர்ச்சை’ என்கிற சப்தம் அர்ச்சாவதார விக்ரஹத்தைச் சொல்லுகிறது. இவைகளுக்கு வாசியில்லை என்றால், விக்ரஹமும் ஸ்வரூபமும் ஒன்று என்கிறதுபோல் இருக்கிறது. அது ஸர்வ ஶாஸ்த்ர விருத்தம். மூர்த்தம் அமூர்த்தம் என்பதற்கு இவர் சொன்ன அர்த்தத்துக்கும் விருத்தம். கிம்பஹுநா. இந்த வ்யாஸத்தில் பல விடங்களில் தர்ம தர்மிகளுக்கு வ்யத்யாஸ மறியாமலும், திவ்யமங்கள விக்ரஹத்திற்கும் திவ்யாத்ம ஸ்வரூபத்திற்கும் வ்யத்யாஸ மறியாமலும் விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் பண்டிதர்கள் பராமர்சிக்கவேண்டும்.

இது அவச்யமாகக் கவனிக்கத்தக்க விஷயம். ஒரு குயவன் தனக்கு ஸ்வாதீநமான மண் உருண்டையைக் கட கலஶ ஶராவாதி ரூபங்களாக எப்படிச் செய்கிறானோ, அப்படியே பகவான் ஸமஸ்த ஶக்த்யாச்ரயமான விச்வரூப விலக்ஷணமான தன் திவ்யமங்கள விக்ரஹத்தை வ்யூஹ விபவ அந்தர்யாமி யர்ச்சா ரூபங்களாகப் பரிணமிப்பிக்கிறான். இது ‘ஸஹஸ்ரஶக்திரூபேவாணி தக்ஷ்ணோதிஜநேஶ்வர’ என்கிற விஷ்ணு புராண ச்லோகத்தினுடையவும், இவர் எடுத்த ‘ஹ்ருதம் ஶாஶ்வதம்’ என்கிற ஸாராவளீ ச்லோகத்தினுடையவும் ஸாரார்த்தம். அதில் பரரூபம் காரணம்; வ்யூஹ விபவாதிகள் கார்யங்கள்.

ம்ருத்வேந ம்ருத் பிண்ட கட ஶராவாதிகள் ஒன்றென்று எப்படி வ்யவஹரிக்கப் படுகின்றனவோ, அப்படியே அப்ராக்ருத த்ரவ்யத்வேந பர வ்யூஹாதிகளும் ஒன்றென்று வ்யவஹரிக்கப்படுகின்றன. ஆனால் அதில் காரணமான ம்ருத் பிண்டமும் கட ஶராவாதி கார்யங்களும் எப்படி பிந்ந பிந்ந வ்யக்திகளோ, அப்படியே காரணமான பரரூபமும் கார்யங்களான வ்யூஹாதிகளும் பிந்ந பிந்ந வ்யக்திகளே. ஆகையால்தான் பஞ்ச ப்ரகார ரூபங்கள் என்று ஐந்து வகைப்பட்டவைகளாகச் சொல்லப்பட்டன. அவைகளுக்கு லக்ஷண பேதங்களும் சொல்லப்பட்டன. அதில் கார்யமான கடத்தில் கரியைத் தடவினாலும் சுண்ணாம்பைத் தெளித்தாலும், அது காரணமான ம்ருத் பிண்டத்திலோ ஶராவாதிகளான இதர கார்யங்களிலோ எப்படி ஸம்பந்தப்படாதோ, அப்படியே அர்ச்சாவிக்ரஹத்திற்கு ஏற்படும் கர்ப்ப க்ருஹாதிகளில் சண்டாள த்ருஷ்டி விஷயத்வாதி ரூப தோஷமும் அங்க வைகல்யாதி தோஷமும் ஒரு ப்ரகாரத்தாலும் பரரூபத்தில் ஸம்பந்தப்படாது. இங்கு, தோஷ மென்பதோ அசுத்தி என்பதோ சண்டாளாதி த்ருஷ்டி விஷயத்வமே தவிர, அதனால் உண்டாகும் உருண்டைபோன்ற தொரு வஸ்த்வந்தர மில்லை. சண்டாள தர்ஶநத்தாலே தேவதை பலாயநம் பண்ணுகிற தென்றாலும், சண்டாள தர்ஶநம் வந்தால் ப்ராயச்சித்தம் பண்ணவேண்டு மென்றாலும், அந்தப் பலாயந ப்ராயச்சித்த ஹேதுவான சண்டாள தர்ஶந மன்றோ தோஷமாவது அசுத்தியாவது? ஒருவன் களஞ்ஜாதி பக்ஷணத்தைச் செய்தால் அவன் ப்ராயச்சித்தி யாகிறா னென்றால், ப்ராயச்சித்த நிமித்தமான களஞ்ஜ பக்ஷணமே யன்றோ அவனுக்கு அசுத்தியாயும் தோஷமாயும் ஆகிறது ? எதைச் செய்தால் ப்ராயச்சித்தம் சொல்லுகிறதோ, அந்தச் செய்கையே அசுத்தியென்றும் தோஷ மென்றும் வ்யவஹரிக்கப் படுகிறது. ஆகையால் இங்கு சண்டாள தர்ஶந விஷயத்வம் வந்தால், அதுவே அசுத்தி யென்றும் தோஷ மென்றும் அகாமனாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். ஹரி ஜனங்கள் ஆலயத்தில் போய்ப் பகவானை ஸேவித்த பிறகு சண்டாள தர்ஶந ரூபமான அசுத்தியும் தோஷமும் பகவானுக்கு வாராவென்று இவர் சொன்னால் அது ப்ரத்யக்ஷாபலாப மாகும். சண்டாள தர்சந விஷயத்வ ரூப தோஷம் அர்ச்சைக்கு வந்தால், அது நித்ய விபூதி எம்பெருமானுக்கும் ப்ரஸங்கிக்கும் என்றும், ப்ரஸங்கம் அசுத்தி யின்னதென்றும் தோஷ மின்னதென்றும் தெரிந்துகொள்ளாமல் சொன்ன வார்த்தை. நாம் ஒரு நிஷித்தத்தைச் செய்தால் நிஷித்தாசரண ரூப தோஷம் நமக்கு ஸம்பவிக்கும். அதற்கு ப்ராயச்சித்த முண்டு. அதைச் செய்துகொள்ளாவிடில் பகவான் ‘இவன் நரகம் போகக்கடவன்’ என்று ஸங்கல்பிப்பான். பகவானுக்குச் சண்டாளாதி தர்ஶந ரூப தோஷம் ஸம்பவித்தால், ‘நான் பிம்பத்தில் நின்றும் பலாயநம் பண்ணக்கடவேன்’ என்று ஸங்கல்பித்து அவன் பலாயநம் செய்வான். இது யுக்தம் தானே. நம் போலிகள் ஓரிடத்தில் குடியிருந்தால், அவ்விடத்தில் ரோகிஷ்டனையும் நம்மில் தாழ்ந்த ஜாதியரையும் கூடவே குடியிருக்கச் செய்தால் நாம் அந்த இடத்தைவிட்டு விலகிப்போகமாட்டோமா ? அப்படிப்போல, நிஸ்ஸமாப் யதிகனான பகவான் தன் கர்ப்ப க்ருஹத்தில், அங்கு வர அநர்ஹரானவர்களைக் கொண்டுவந்து விட்டால், அவன் தன் ஶுபாச்ரயத்தோடு விலகிப்போகமாட்

டானு? அதில் என்ன ஸந்தேஹம்? மறுபடியும் ஸம்ப்ரோக்ஷணாதிகளைச் செய்தால் அதில் அவன் ஸாந்நித்யத்தை யடைவன் என்பதும் யுக்தமே. ஆகையால் அர்ச்சைக்குத் தோஷத்தை ஒப்புக்கொண்டால் நித்ய விபூதி ரூபத்துக்கும் தோஷம் வர ப்ரஸங்கிக்கும் என்று இவர் பண்ணும் ப்ரஸங்கம், பரரூபத்துக்கும் அர்ச்சைக்கும் வ்யக்தி பேத முண்டென்று அறியாமல் ஒன்ருக ப்ரமித்துச் சொன்னதாகையால் சரியன்று. முன் சொன்னபடி, கடத்தில் தெளித்த சுண்ணும்பு ம்ருத் பிண்டத்தில் போகாதிறே. எந்த கடத்தில் கரியோ சுண்ணுப் போ பட்டுவிட்டதோ அதை மாத்ரம் அலம்பிவிட்டால் அந்தத் தோஷம் போய்விடுகிறது போல, எந்த அர்ச்சா விக்ரஹத்திற்குச் சண்டாளாதி த்ருஷ்டி விஷயத்வ ரூப தோஷ மேற்பட்டதோ அதற்கு மாத்ரம் ஸஹஸ்ர கலசாபிஷேகம் பண்ணினுல் அந்தத் தோஷம் நிவர்த்தமாய்விடு மென்பதே பாஞ்சராத்ர ஹ்ருதயம்.

இவர் சொல்படி பரரூபமும் அர்ச்சையும் வ்யக்தியே ஒன்றென்ருல், அர்ச்சையில் அங்க வைகல்யாதிக ளுண்டானுல், அது பரரூபத்திலு முண்டாக ப்ரஸங்கிக்கும். அங்க வைகல்ய முண்டானுல் அர்ச்சையினின்று சுபாச்ரயமே போய்விடுகிறது என்பதில் ஒருவருக்கும் விவாத மில்லை. அப்படியே சண்டாளாதி தர்சந ரூப தோஷம் ஸம்பவித்தால், ‘தைவோபிம்பாத்வயாயதே’ என்றும், ‘ஸஹஸ்ரம் கலசாபிஷவ:’ என்றும் சாஸ்த்ரம் சொன்னுல், அப்படி ஸம்பவிக்கா தென்பதற்கு யாருக்கு அதிகாரம்? “ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம:” என்கிறபடி துர்ஜ்ஞேயமான ஸூக்ஷ்ம தர்ம விஷயத்தில் மிதம்பச ப்ரஜ்ஞர்களான நாம் ஸ்வச்சந்தமாக விசாரம் பண்ணக்கூடாது.

இது நிற்க: ஸம்ப்ரதாய விசாரம் பண்ணுகிருர். அதையும் பராமர்சிக்க வேண்டும். சூடிக் கொடுத்த நாச்சியார் ரங்கநாதனிடத்தில் வ்யாமோஹம் கொண்டு ஐக்யமான பிறகு, ரங்கநாதனுக்கும் நாச்சியாருக்கும் திருவுள்ள முகக்கவேண்டியதைக் கருதித் தத்கால மிருந்த பெரியோர்கள், அவர்களுக்கு மாலை மாற்றுதல் மார்கழி நீராட்டம் திருப்பாவை ஸேவை முதலானவற்றை ஸர்வாலய வ்யாபகமாக ஏற்பாடு செய்ததுபோல், துலுக்க நாச்சியாரும் ரங்கநாதனேடு ஐக்யமான பிறகு அழகியமணவாளனுக்கும் அந்த நாச்சியாருக்கும் திருவுள்ளத்தின் உகப்பை உத்தேசித்துத் தத்கால மிருந்த பெரியோர்கள் சில ஆசார வ்யத்யாஸங்களை ஏற்பாடு செய்ய, அது அந்தத் திவ்யதேசத்தில் மாத்ரம் நடந்துவருகிறதே யொழிய, அது ராஜாஜ்ஞையாய் நடந்துவருகிற தென்று இவர் சொல்வது நம்பத்தக்கதன்று. இவர் சொல்கிறபடி வஸ்த்ரத்தில் ப்ரஸாதத்தைச் சேர்த்து அதையே ரங்கநாதனுக்கு அமுதுசெய்யப்பண்ணவேண்டு மென்றும், அதையே ஸகல பாகவதோத்தமர்களும் ஸ்வீகரிக்கவேண்டு மென்றும் ராஜா ஒரு சட்டம் செய்தா னென்றும், அதுவே ஸம்ப்ரதாயத்தில் வந்திருக்கிறதென்று ஒப்புக்கொண்டாலும், ப்ருக்ருசத்தில் ஹரிஜன ப்ரவேச முள்ள ஆலயங்களுக்கு வைதிகர்க ளெல்லாம் போகவேண்டு மென்றும் தீர்த்த ப்ரஸாத ஸடாரிகளை வாங்கிக்கொள்ளவேண்டு மென்றும் ஒரு ராஜாஜ்ஞை யில்லையிறே. ஹரிஜனங்களும் ஆலயத்திற்குள் போகலா மென்றும், அதைத் தடுப்பவர்களுக்குத் தண்டனை என்று மன்ருே சட்ட மிருப்பது? ராஜாஜ்ஞை

அப்படியிருக்க, அதன் ஸூக்ஷ்மத்தை லௌகிகம் தெரிந்த இவர் நன்ருய் அறியாமலும் ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களை நன்ருய்ப் பராமர்சிக்காமலும் இந்த விஷயத்தில் 'ராஜாஜ்ஞா ந-வாறு நம்ஸம்ஷூஷாயாமதழ' என்றிவர் சொல்வது எப்படிப் பொருந்தும்?

"இவ்விஷயங்களை ஶாஸ்த்ரம் ஸம்ப்ரதாயம் ஶிஷ்டாசாரம் என்றும் மூன்றையும்கொண்டு முடிவு செய்யவேணும்" என்று ப்ரதிஜ்ஞை செய்து, மேல் 'ஶிஷ்டாசாரம் நம் ஸமூஹத்தில்' என்ருரம்பித்துச் சில துஷ்டாசாரங்களை உதாஹரிக்கிருர். இப்படியாகில் 'ஶாஸ்த்ரம் ஸம்ப்ரதாயம் துஷ்டாசாரம் என்றிவைகளைக் கொண்டே' என்றே எழுதியிருக்கலாம். ஶிஷ்டாசாரமென்று தலைப்பிட்டு 'அந்தரங்கத்திலும் பஹிரங்கத்திலும் துஷ்டர்களானவர்களிடத்தில் மஹநீயரான பூர்வாசார்யர்களும் தீர்த்தம் வாங்கிக்கொள்ளவில்லையா?' என்கிருர். எந்தப் பூர்வாசார்யர்கள் இப்படிச் செய்தார்களோ தெரியவில்லை. வெளிப்படையாக ஒருவன் துஷ்டனென்று தெரியாதவரையில், சில வைதிகர்கள் ஒருவனிடத்தில் கோயிலில் தீர்த்தம் வாங்கிக்கொண்டாலும், அவன் ஜெயிலிலிருந்தவன் சீமைக்குப் போனவன் என்று லோக ப்ரஸித்தமாகத் தெரிந்தால், இப்பொழுதுள்ள ஶிஷ்டர்களும் அவனிடத்தில் ப்ராயச்சித்தம் பண்ணுமல் தீர்த்த ஸ்வீகாரம் செய்யமாட்டார்களே! அதையும் துணிந்து செய்பவர்கள் ஶிஷ்டர்களன்ருகையால் அது ஶிஷ்டாசாரமாகாது. இப்படித் தெரியாமல் செய்யும் சில துராசாரத்தை ஶிஷ்டாசாரமாக்கி, அது நடப்பது இவருடைய குயுக்தி கல்பிதமான சுபத்வ பரிஷ்காரத்தை யவலம்பித்து, "சுபத்வத்தைத் தவிர்த்து அசுத்தி ஏற்படாதென்னும் கொள்கையினுல்தானே" என்று ஹேது சொல்லுகிருர். அது, இவருடைய பரிஷ்காரமே துஷ்டமென்று சொன்னதாலும், கீழ்ச்சொன்ன ஆசாரம் அஜ்ஞாநமூலமென்று நிரூபித்ததாலும் அத்யந்தாஸங்கதமென்பதை வித்வான்கள் அறியலாம்.

மேல்—'அநிவார்யமான பிழைகள் என்னவென்ருல்: ராஜாஜ்ஞையால் வரும் ப்ரௌடா விவாஹம் ஆலய ப்ரவேசம் முதலியன' என்று எழுதப்பட்டிருக்கிறது. சாரதா சட்டத்தில் 14-வயதுக்குள் விவாஹம் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய, ப்ரௌடா விவாஹமே செய்யவேண்டும் என்று குறிப்பிட்ட சட்டமில்லை. அந்த வயதில் சிலர் ப்ரௌடையாகலாம்; சிலர் ஆகாமலுமிருக்கலாம். ஆகாதவர்களுக்கு "யாவநூதஃஉதீஹவெதஃ" என்கிற ஶாஸ்த்ரத்தின்படி தோஷமில்லை. ஆனவர்களுக்கு நிர்ணயஸிந்துவில் சொல்லியிருக்கும் ப்ராயச்சித்தத்தைப் பண்ணி விவாஹம் பண்ணினுல் தோஷமில்லை. சாஸ்த்ரத்திற்குப் பயந்த ஶிஷ்டர்கள் அப்படியே நடத்துகிருர்கள். ஹரிஜன ஆலய ப்ரவேசம் ராஜாஜ்ஞையால் வருவதொன்ருகையால் அது அநிவார்யமே. அதை ஒருவரும் நிவாரணம் பண்ணவில்லை. ஆனுலும் ஶிஷ்டர்களெல்லாம் ஹரிஜன ப்ரவிஷ்ட ஆலயங்களுக்குப் போகவேண்டுமென்கிற ஒரு ராஜாஜ்ஞையில்லாமையால் அதை இவர் ராஜாஜ்ஞாஸித்தமென்று வற்புறுத்தி எழுதுவது ஸரியாகுமா? மேலே தம் தப்பான சுபத்வ பரிஷ்காரத்தை த்ருடப்

படுத்திக்கொண்டு, ஶாஸ்த்ரங்களில் சண்டாள தர்சந விஷயத்வ ரூபமான அசுத்தி ஸம்பவித்தால், ஸஹஸ்ர கலஶாபிஷேகாதிகள் ப்ராயச்சித்தங்கள் என்று சொல்லியிருப்பதைப் புறக்கணித்து, ‘எங்கு அசுத்தம் ஸம்பவிக்காதோ அங்கு அசுத்தம் கல்பிப்பது உசிதமா?’ என்று எழுதுகிறார். இங்கு அசுத்தம் ஸம்பவிக்கும் இங்கு அசுத்தம் ஸம்பவிக்காது என்று சொல்லுவதற்கு இவருக்கு அதிகாரமா?

மேல்—“ இதில் மற்றொரு துக்கிக்கக்கூடிய விஷயம். வைதிகர்களில் சிலர் கோயிலுக்குப் போனவர்களை ப்ராயச்சித்தம் செய்துகொள்ளச் சொல்லுகிறார்களாம்” என்று எழுதி.........இது எந்த அபசாரத்தில் சேர்ந்தது!” என்று பரிஹாஸமாக எழுதுகிறார். ‘ஸுஹோஷ ஸஹஹ க்ஷம்விவஸீ தஷிஷஂஜமத’ சதுஸ்தந்த்ர பாரங்கதராய், ப்ரபந்த பாராயண வேதாத்யயந ஸம்பந்நராய், உதயோபஸ்தாந ஔபாஸநாதிகளை ஆதிமுதல் தவறாதவராய், இரண்டு வேளையும் கோயிலுக்குப் போய் ஸ்தவ்யஸ்தவ ப்ரியனான பகவானைக் கண்ணும் கண்ணீருமாய் நின்று ஸ்தோத்ரம் செய்து, பரம பாவநமான பகவத் பாதோதகாதிகளை ஸ்வீகரித்து, ஸ்ரீஶடாரி முதலானவைகளை ஶிரஸா வஹித்து, ஆத்மாவை க்ருதார்த்தமாக எண்ணி, ப்ரதக்ஷிண ப்ரணாம மூலமந்த்ராதி ஜபாதிகளாலே பகவானுக்கு ப்ரீதியை உண்டாக்கி, பஞ்சபர்வம் முதல் ஸர்வோத்ஸவங்களிலும் வேதபாராயண அநுயாத்ராதி கைங்கர்யங்களைப் பண்ணி, ஸர்வ காலங்களையும் அவந்த்யமாக்கி ஸந்துஷ்டராயிருந்த பரமைகாந்தியான ஒரு மஹான், கலி தோஷத்தாலே ஆலய ப்ரவேசம் நடந்த பிறகு, ‘ஐயோ! இப்படி நேர்ந்துவிட்டதே! சண்டாளாதிகள் இப்படிப் பகவானைத் தர்ஶநம் பண்ணினால், அவன் தன் சுபாச்ரயத்தோடு ‘தெவொஷிஂஷா த வஜாயதெ’ என்கிறபடி அந்த பிம்பத்திலிருந்து ஓடிப்போகிறான் என்று ஶாஸ்த்ரம் சொல்லுகிறதே! சில ஶாஸ்த்ரம் அந்த பிம்பத்துக்கு ப்ரோக்ஷணாதிகளை விதிக்கிறதே! அப்படியிருக்க நாம் எப்படிப் பகவானை இனி ஸேவிப்பது?’ என்று துக்கிதராய் ஆலயம் போவதை ஆத்யந்திகமாக நிறுத்தி, தன் க்ருஹார்ச்சையிலும் அந்தர்யாம்யநுபவத்திலும் ப்ரவர்த்தராயிருக்கிறார். அவர், தம்மிடத்திலேயே அத்யயநம் பண்ணி, காலக்ஷேபாதிகளையும் பண்ணி ஶிஷ்டனாய்ப் போந்த தன் புத்ரன் துருபந்யாஸங்களைக் கேட்டு ஆலய ப்ரவேசமான கோயிலுக்குப் போய் ஹரிஜனங்களோடிருந்து தீர்த்த ப்ரஸாத ஶடாரியை ஸ்வீகரித்து வந்தான் என்பதைச் செவியுற்று அவனை யழைத்து, “அப்பா! கோயிலுக்குப் போனையா? ஹரிஜனங்கள் கர்ப்ப க்ருஹத்திலிருந்து பெருமாளைப் பார்த்தபிறகு அர்ச்சையினின்றும் ‘தெவாஷிஂஷா த வஜாயதெ’ என்று சில சில ஶாஸ்த்ரம் சுபாச்ரயத்தோடு பகவானே ஓடிப்போகிறான் என்றும், ‘ஸஹஸ்ர கலஶாஷவஃ’ என்று சில சாஸ்த்ரம் ஸம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறதே! அதை நீ கேட்டதில்லையா? அந்த ஶாஸ்த்ரங்கள் கேவலம் கடலோசையா? அர்த்தமற்றவைகளா?“ தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தெ கார்யாகார்யவ்யவஸ்திதௌ” என்று கீதையில் சொல்லியிருப்பது உன் மனத்தில் படவில்லையா? என்னைக் காட்டிலும் ஶாஸ்த்ர விசாரத்திலோ கர்மாநுஷ்டானத்திலோ பகவத் பக்தியிலோ நீ உயர்ந்தவனா? கண்ணும் கண்ணீரு

மாய் நின்று நான் பெருமாளை ஸேவிக்கும்போது நீ பார்த்த தில்லையா? அப்படியிருந்தும் '[illegible]' என்பதை யநுஸரித்து நான் இப்போது கோயிலுக்குப் போகாதது உனக்குத் தெரியாதா?

"[illegible] ।
[illegible] ॥"

என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஐந்தாவதங்கம் கடைசியில், 'அந்தர்யாமி வஸிக்கும் ஆந்தர ஸ்தாநம் ஒன்றே எந்நாளும் தோஷமற்றது; பாஹ்யமான இதரங்களுக்கெல்லாம் தோஷ ஸம்பாவனை யுண்டு' என்று சொல்லியிருப்பதை நீ காலக்ஷேபத்தில் கவனிக்கவில்லையா? இங்கு 'ஏக' சப்தத்தாலே இதரங்களுக்குத் தோஷ ஸம்பாவனை உண்டென்று ஏற்படவில்லையா? நிர்க்குண ஸகுண வாதமே யறியாத ஒருவர் அதை த்ருஷ்டாந்தமாக்கி, வேத வாக்ய முபக்ரமம் போலவும் பாஞ்சராத்ர முபஸம்ஹாரம் போலவும் எண்ணி, ச்ருதியாலே பாஞ்சராத்ரத்தைப் பாதிக்கலாம்போல் வழவழவென்று ஸ்பஷ்டமன்றிக்கே எழுதியிருப்பதைப் பார்த்து நீயும் ப்ரமிக்கலாமா? கோயிலில் பிம்பத்திலிருந்து பகவான் சுபாச்ரயத்தோடு பலாயநம் பண்ணிவிட்டால் கோயிலும் கடை வீதியைப்போல் ஆய்விடுகிற தன்றோ? அப்போது கடைவீதியைப் போல் அங்கும் ஹரிஜனங்களுக்கு நாலு நுகத்தடி விலகவேண்டியிருக்க, கர்ப்ப க்ருஹத்தில் அவர்களோடு கூடவே இருக்கலாமா? இருந்தாலும் அவர்களுக்குக் கொடுத்த தீர்த்தத்தின் சேஷத்தை அவர்கள் பார்க்க வாங்கிச் சாப்பிடலாமா? அவர்கள் தலையில் ஸாதித்த சடாரியை நீயும் தலையில் ஸாதித்துக்கொள்ளலாமா? தேவ ஸாந்நித்ய மில்லாத இடத்தில் இப்படியெல்லாம் செய்வது தோஷ மன்றோ? ஆகையால் நீ அவர்கள் ஸமீபத்தில் இருந்ததற்காகப் புஷ்கரிணீ ஸ்நாநமும் யஜ்ஞோபவீத தாரணமும், அவர்கள் தீர்த்த சேஷத்தைச் சாப்பிட்டதற்காக ப்ரஹ்ம கூர்ச்ச ப்ராசநமும் ப்ராயச்சித்தமாகச் செய்துகொண்டால்தான் நீ என்னுடன் உட்கார்ந்து சாப்பிடலாம் என்று ப்ராயச்சித்த விதாநம் பண்ண, ஆஸ்திகனான அவருடைய புத்ரனும் 'தேவ ஸாந்நித்ய மில்லாவிட்டால் ஆலயமும் மற்ற இடமும் துல்யம்தானே. அங்கும் ஹரிஜனங்களுக்கு ஒதுங்கவேண்டியதுதானே. அப்படித்தானே சாஸ்த்ரத்தின் தாத்பர்யம். அப்படியிருக்க, நான் ஹரி ஜனங்களோடு கர்ப்ப க்ருஹத்தி லிருந்தது தப்புதானே. அவர்கள் தீர்த்த சேஷத்தைச் சாப்பிட்டதும் அவர்களுக்கு ஸாதித்த சடாரியை ஸாதித்துக்கொண்டதும் தோஷமே என்று இப்பொழுதுதானே தோன்றுகிறது. ஆகையால் இனிமேல் இம்மாதிரி தோஷ கார்யத்தில் நின்றும் உபரதனாய், நம் பிதா சொன்ன ப்ராயச்சித்தத்தைச் செய்துக்கொள்வோம் என்று தீர்மானித்து, அவ்வாறே ப்ராயச்சித்தத்தையும் செய்துகொண்டால், அங்குப் பரமாஸ்திகரான பரமேகாந்தியான பிதா சொன்னது துக்கிக்கத்தக்கதா? பிதா சொன்னபடி புத்ரன் செய்துகொண்ட ப்ராயச்சித்தங்கள் துக்கிக்கத்தக்கவைகளா? சாஸ்த்ரார்த்தங்களில் ஸமீசீந நிர்ணய மில்லாமையால் தானும் வ்யாமோஹத்தை யடைந்து, இதரர்களுக்கு உபந்யா

ஸாதிகளாலே வ்யாமோஹத்தை உண்டுபண்ணினது துக்கிக்கத்தக்கதா? இதை ஸாராஸார விவேக சதுரர்களான பண்டித ச்ரேஷ்டர்களே பராமர்ஸிக்க வேண்டும்.

ஆலய ப்ரவேசத்தாலே அத்யந்தம் வருந்தியிருக்கிற மஹான்களுடைய ஹ்ருதயத்தை, விருத்தமான உபந்யாஸத்தாலே மிகவும் புண்படுத்துகிறாரே என்கிற துக்கத்தால் இந்த வ்யாஸத்தில் சில கடுக்திகள் நேர்ந்திருக்கலாம். அவற்றைப் பார்த்து இவர் 'யதுக்தமஹஸாவதவேதி' என்கிற ந்யாயத்தாலே க்ஷமித்தருளவேண்டு மென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. ஆனால் இந்த வ்யாஸத்தை இவர் நன்றாகப் பராமர்சிக்கவேண்டு மென்பதும் ஒரு ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வதாரி ஸூ ஆவணி (ஸிம்ஹ) மீ

16—8—48	1உ	திங்கட்கிழமை	...	சூந்யதிதி: ஸிம்ஹரவி 20. 24
17—8—48	2உ	செவ்வாய்க்கிழமை	...	சூந்யதிதி
18—8—48	3உ	புதன்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல சதுர்த்தசி திதி: ரிக் உபாகர்மம்
19—8—48	4உ	வியாழக்கிழமை	...	யஜுருபாகர்மம்
20—8—48	5உ	வெள்ளிக்கிழமை	...	காயத்ரீ ஜபம்
27—8—48	12உ	வெள்ளிக்கிழமை	...	ஜந்மாஷ்டமி: முநித்ரய வைகாநஸ ஸ்ரீஜயந்தீ
28—8—48	13உ	சனிக்கிழமை	...	ஸ்ரீ பாஞ்சராத்ர ஜயந்தீ
30—8—48	15உ	திங்கட்கிழமை	...	ஏகாதசி திதி: ஸ்மார்த்த ஏகாதசி
31—8—48	16உ	செவ்வாய்க்கிழமை	..	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி
3—9—48	19உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
4—9—48	20உ	சனிக்கிழமை	..	ஸிம்ஹ சுக்ல ப்ரதமை த்விதியை திதி த்வயம்
5—9—48	21உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல த்ரிதீயை திதி: ஸாமோபாகர்மம்
14—9—48	30உ	செவ்வாய்க்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல த்வாதசி திதி; ஸர்வ (பரிவர்த்தந) ஏகாதசி (வ்ரதம்)
15—9—48	31உ	புதன்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல த்ரயோதசி திதி: ஸ்மார்த்த முநித்ரய ச்ரவண த்வாதசி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அர்ச்சாவதார தத்வம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு]

அர்ச்சாவதாரத்துக்கும் பரவ்யூஹ விபவாந்தர்யாமி ரூபங்களுக்கும் உள்ள வாசி இன்னதென்று தெரியாமல், பம்பாய் ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸையங்கார் சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்வித்திருக்கும் வ்யாஸத்தை வாசகர் சிலர் கண்டு மயங்கக் கூடும். ஆதலால் அதற்கு ஒரு மறுப்பு எழுதித் தத்வத்தைத் தெளிவிக்கவேண்டியிருக்கிறது.

1. பரவ்யூஹாதி நான்கு ரூபங்களும் இயற்கையாகவே சுபாச்ரயங்கள். அர்ச்சா விக்ரஹமோ அத்தகைய தன்று. ப்ராக்ருதமாயுள்ள பிம்பத்தில் ப்ரதிஷ்டா விசேஷ பலத்தால் நீர க்ஷீர ந்யாயத்தினுல் அப்ராக்ருத விக்ரஹத்தோடு பகவான் ஸாந்நித்யம் செய்கிறுன் என்பதாக சாஸ்த்ர மர்யாதை உள்ளது.

“ ஜெவொ வெகுண்ட நாயஸ்து க நகாஸ நஸம்ஸ்தித: ।
ஸெவஸ்ரீஹ-ஸி நீஜாஸி: வ்ராஉ-ஹஷாவெஷயெ தமெ: ॥
ஸிம்ஸாகூ தா க நாஸிம்ஸெ ஸஶாம தாவ திஷ்தெ ।
சுஅஶாவி ஞுளக்கீ யா ஸா ஹமவஹாவிதா க நாழ ।
உஞ உஞெ ஶூர நாஸாக ஸாவி ஷாஜுணூ விமு ஹா ॥ ”

என்பதாகப் பகவச் சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆராதகர் தமக்கு ப்ரீதிகரமாய் ஸுவர்ண ரஜதாதிகளால் செய்த ப்ரதிமையில் நீர க்ஷீர ந்யாயத்தாலே அந்த ப்ரதிமைக்கு ஸமாநமான அப்ராக்ருத ரூபாந்தரத்தோடு கலந்து ஸந்நிதாநம் செய்கின்றுன் எம்பெருமான். பரவ்யூஹாதி நான்கு ரூபங்கள் போலவே அந்த ரூபமும் சுத்த ஸத்வமய மாகிறது என்பது இதன் கருத்து.

2. ஸ்ரீ பௌஷ்கர பகவான் விஷ்ணு தர்மத்தில் அர்ச்சாவதார மாஹாத்ம்யத்திலே,

“ ஸுமேவாம் வூ திஶாம் விஷொ: வூஸநவஉநெக்ஷணாழ ।
சுயாதூ ந: வீ திகஸீம் ஸுவணூ ரஜதாதிஸி: ।
தஸாம் ஸஹூ ஸஶாரோவ உநஸா தநயொ ஹவெக ॥ ”

இத்யாதி அருளியதை உதாஹரித்து, ‘ சுகூ வூதிஷாதிவசாக உவவாவதார ரூவெசுவம் விவக்ஷிதழ ’ என்பதாக ஸ்தோத்ர பாஷ்யத்தில் ஸ்ரீ தேசிகன் விவரணம் செய்தருளுகிறுர். ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலும் “ ஸயம்வகூ............ ....வூாகூதாவூாகூ தஸம்ஸமெஶாவி நாநுவவநு:॥” என்று கண்டோக்தி உள்ளது.

3. இவ்வாறான ப்ரமாணங்களால் அர்ச்சா ரூபத்தில் அப்ராக்ருதத்வமும் சுபாச்ரயத்வமும் ப்ரதிஷ்டாதிகளால் வந்தேறியானவை யென்றும், மற்ற ரூபங்களில் அவை இயற்கையாகவே யுள்ளவை யென்றும் தெளிவாகின்றது. ஆலயங்களில் திநந்தோறும் ஆவாஹநம் ஸாந்நித்ய யாசநம் முதலிய தஶாஹ்வாந ஸத்காரங்கள் நடைபெறுவதைக் காணலாம். ப்ராக்ருத பிம்பத்தில் அப்ராக்ருத பிம்ப ஸம்ச்லேஷமே யுள்ளது. அஸ்ப்ருச்ய ஸ்பர்ஶம் முதலியவற்றால் ஸாந்நித்யம் விலகுவதாகவே ப்ரமாணம் கூறுகிறது.

‘ [illegible] ।

[illegible] ॥’

என்பதாக வைகாநஸாகமத்தி லுள்ளது.

4. காரணாகமத்திலும் “[illegible]......[illegible] ॥” என்றும், ஸ்ரீ ப்ரச்ந ஸம்ஹிதையில் “[illegible]............[illegible] ॥” என்றும் இவ்வாறாகப் பல ப்ரமாணங்கள் உண்டு. ஸர்வஜித் ஹூ ஐப்பசிமீ த்து ஸஞ்சிகையில் அடியேன் ‘ஆலயமும் ஆகமமும்’ என்கிற வ்யாஸத்தில் இவற்றை யெல்லாம் உதாஹரித்திருக்கிறேன்.

5. ஸகுண நிர்க்குண ச்ருதிகளுக்குப்போல் தாத்பர்ய பேதம் பண்ணிக்கொண்டு இவற்றை நிர்வஹிக்க வேணுமென்று ஐயங்கார் எழுதுகிறார். ‘[illegible]’ என்பதுபோல் அங்கு வ்யவஸ்தையானது வசந ஸித்தமாகி உள்ளது. அப்படி வசந மில்லாம லிருக்க, ப்ரபல ப்ரமாணங்களால் ப்ரோக்ஷணாதிகள் விதிப்பதை அந்யதாகரணம் செய்வதற்கு யாமோ அதிகாரிகள் ?

வைகாநஸாலயங்களில் பாஞ்சராத்ரிகளும், பாஞ்சராத்ராலயங்களில் வைகாநஸர்களும், இவ்விரண்டிலும் நம் போன்ற அதீக்ஷிதர்களும் ஆராதிக்க ஶாஸ்த்ரம் இடம் கொடுக்கவில்லையே ! தீண்டாதார் ஸ்பர்ஶத்தினால் சுபாச்ரயத்வம் போய்விடாதென்று கூசாது எழுதும் இவர், அவர்கள் பூஜை செய்வதாலும், வைதிக மந்த்ரம் தீக்ஷை முதலிய க்ரம மின்றி ஆராதிப்பதாலும், பிம்பத்துக்கு யாதொரு குறைவு மில்லை யென்றுதானே இவர் சொல்வதாகக் கொள்ளவேண்டும் ?

(6) ‘ராஜாங்கத்தாரால் செய்யப்பட்ட இந்தக் கார்யத்தினால் பகவத் ஸாந்நித்யம் போய்விடாது’ என்று சில சாஸ்த்ர வச்யர் சொல்வதாகக் கல்பநம் செய்கிறார் இவ்வையங்கார். பகவத் ஸாந்நித்ய மென்பது ராஜாங்க உத்தரவிற்கு உட்பட்டதுபோலும் !

(7) ராஜாஜ்ஞை தவறாக இருந்தாலும் அதை விசேஷ விதியாகக் கொண்டு கீழ்ப்படியவேண்டியதே யொழிய, அதை மீறுவது கூடாதாம்.

இந்தத் தர்ம ஸூக்ஷ்மத்தை அறிந்திருந்தால் 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்று ராஜாஜ்ஞையைக் குட்பட்டுக் கையொப்ப மிட்டு, பெரிய நம்பிகளும் ஆழ்வானும் தம் திருமேனியைப் பாதுகாத்திருக்கலாமே. குடியரசு ஜன நாயகம் என்று ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் எல்லோரும் ராஜாக்கள் அன்ரே? ஜாதி பேதம் மதபேதம் அறவே யொழியவேண்டும் என்று விடாமுயற்சி செய்யும் பலர் நிர்வாஹத்திற்கு உட்பட்டு இவ்வையங்கார் முதலில் நடந்துகொண்டால், இவர் உபதேசத்திற்கும் நடத்தைக்கும் உள்ள ஐக்யத்தைப் பிறர் கண்டு களிப்பார்கள். கேவலம் உபதேசம் எதற்காக?

(8) சிஷ்டாசாரம் என்று ஏதோ சில யுக வைபரீத்யங்களை த்ருஷ்டாந்தமாகக் காட்டுகிரூர். 'பெருமாள் ஸந்நிதியில் அநேக அநாசாரங்களிருந்தும், மஹநீயர்களான நம் பூர்வாசார்யர்கள் தீர்த்தம் வாங்கிக்கொள்ளவில்லையா?' இத்யாதியாக இவர் செய்யும் ஆக்ஷேபம். ப்ரபாவரக்ஷாதிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் அருளியதைப் பின்பற்றி ஶிஷ்டர் நடப்பதில் என்ன தோஷம்? அதாவது:—

"உள்ளொடு பகையற்றுப் பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல் பாயுங் கணக்கிலே பாகவத பாவனை பண்ணித் திரிவாரையும் உள்ளறியு மளவும் உபரிசாராதிகள் அஸுரர்களை யாதரித்தாற்போலே ரூப நாமங்களை யிட்டு ஆதரிக்க ப்ராப்தம்.'

(9) 'வைதிகர்களில் சிலர் கோவிலுக்குப் போனவர்களை ப்ராயச்சித்தம் செய்துகொள்ளச் சொல்லுகிரூர்களாம்' என்று துக்கிக்கிரூர் ஐயங்கார். தீண்டாதார் ப்ரவேஶத்தினல் பாக பாண்டாதிகளுக்கும் ஆலயத்திற்கும் அசுத்தி ஏற்படுவதாகப் பகவத் சாஸ்த்ரங்கள் பலவும் கோஷிக்கின்றனவே. அசுசி பாண்டத்தினல் தீர்த்த ப்ரஸாதாதிகளைப் பரிக்ரஹிப்பது அசாஸ்த்ரீயமென்று ப்ராயச்சித்தம் விதிப்பவர்கள் நினைவு. இதை இவர் மறுப்பதானல் தேவாலயங்களில் தீண்டாதார் கையினல் கொடுத்த பகவநிவேதநத்தையும் தீர்த்தம் ஶடாரி முதலியவற்றையும் இவர் ஸ்வீகரித்துக் காட்டவேண்டுமே. உபதேச மாத்ரம் போதுமோ?

10. ஆகவே இவர், விருத்த த்ருஷ்டாந்தங்களைக் காட்டி சாஸ்த்ர ஸரணியை அழிக்கப் பார்க்கும் நோக்கத்தைக் கைவிட்டு, சாஸ்த்ர ஸரணியை அநுஸரித்து எழுதினல் வைதிகருக்கும் லௌகிகருக்கும் அபிநந்தநீயமாயிருக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, B.A., B.L., அட்வோகேட்,
திருப்பாப்புலியூர்]

இப்படி அதி வால்லப்யத்தினால் உபாலம்பநம் செய்தது அநுசிதமென்றும், அத்தால் சீற்றம் ஏற்பட்டுத் தம் உத்தேச்யத்துக்குப் பங்கம் நேரிட ப்ரஸங்கிக்குமோவென்றும் நினைத்துப் பெருமாளையும் நப்பின்னைப் பிராட்டியையும் அநுநய கர்ப்பமாய் ஸ்தோத்ரம் பண்ணித் தங்களுடைய அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்கிறார்கள்.

20. முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பென்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்த் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] முப்பத்து மூவர் அரமரர்க்கு முன் சென்று—ஏகாதச ருத்ரர்கள், த்வாதசாதித்யர், அஷ்டவஸுக்கள், அச்விநீ தேவதைகள் இருவர், ஆக முப்பத்து மூன்று ப்ரதாந தேவர்கள்; [இவர்கள் ச்ருங்க க்ராஹி ந்யாயத்தால் எல்லாத் தேவர்களுக்கும் உபலக்ஷணம். ஜகத்தில் எல்லா ஜீவர்களுக்கும் முதல்வரான] தேவர்களுக்குப் பயம் நேரிடும்போது அவர்களை ரக்ஷிப்பதற்காக முன் வந்து நிற்கும் அல்லது ஸமஸ்த தேவர்களுடைய ஸேனைகளுக்கும் முன்னால் ப்ரதாந நாயகனாகச் சென்று; கப்பம் தவிர்க்கும்—பயத்தைப் போக்கும், கலியே—வீரனே! துயில் எழாய்—நீ நித்ரையை விட்டு எழுந்திருக்கவேண்டும். [இதர தேவர்களால் வெல்ல முடியாத மதுகைடபர், ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, ராவணன் முதலியவர்களால் ஜகத்துக்கு ஏற்பட்ட பயத்தைப் போக்க முன்வந்தபடியால் நீயே ஸர்வரக்ஷகன் என்பது நிர்விவாதம். மேலும் கஜேந்த்ரன் முதலை வாயில் அகப்பட்டுக்கொண்டு 'ஆதிமூலமே' என்று கதறும்போது மற்றைத் தேவர்களெல்லாரும் முன்வராமல் திகைத்து நிற்கையில் நீ ஒருவனே முன்வந்து ரக்ஷித்ததால் ஆச்ரித ரக்ஷணம் என்பது உனக்கே தகும். அது உனக்கே அஸாதாரணமான உரிமையாகையால் உன்னை சரணமடைந்து உன் திருமாளிகை வாயிலில் வந்து காத்து நிற்கும் எங்கள் விஷயத்தில் நீ

க்ருபை பண்ணாமல் நித்ரையில் ஆழ்ந்துகிடந்தால் எங்களுக்குக் கதி யேதென்று தாத்பர்யம். மேலும் எங்களுக்கு ரக்ஷணம் இல்லாமற்போவது ஒருபுற மிருக்க, இப்படி உறங்கிக் கிடப்பது உன் ஸ்வபாவத்துக்கு விருத்த மன்றோ? என்பதைத் தெரிவிக்கிறார்.] செப்பம் உடையாய்—ஸௌலப்ய வாத்ஸல்யாதி நற்குணம் பொருந்தியவனே! [இத்தால் எங்கள்போன்ற அர்த்திகளை அநாதரிப்பது உனக்குத் தகாதென்று கருத்து. மேலும் நல்லொழுக்க முடையோர் விடியற் காலத்தில் எழுந்திராமல் உறங்குவது யுக்தமல்ல என்பதும் விவக்ஷிதம்.] திறல் உடையாய்—செய்யும் திறமை வாய்ந்தவனே! [ஸமஸ்த கார்யங்களையும் செவ்வனே செய்து முடிக்கும் சக்தியுடையவனே! என்றபடி. இத்தால் நீ ஜாகரூகனா யிராமல் துயில் கொண்டிருந்தால் ஸூர்யன் உதயமாகாம லிருப்பது போல, ஜகத்தில் ஸமஸ்த ப்ராணிகளும் அவ்வவற்றிற்குரிய கார்யங்களில் ப்ரவர்த்திக்க யோக்யதையற்று நிற்குமே என்று தாத்பர்யம். இப்படி அவரவர் தம் தம் கர்த்தவ்யங்களைச் செய்யாதொழிவது மாத்ரமல்ல; விபரீதாரம்பங்களும் தலையெடுக்கும் என்கிறார்.] செற்றார்க்கு—தீங்கு செய்பவர்க்கு; வெப்பம் கொடுக்கும்—துக்கத்தை உண்டுபண்ணுகிற, [மற்றோரை ஹிம்ஸிப்பதையே ஸ்வபாவமாகவுடைய ஆஸுர ப்ரக்ருதிகளை ஶிக்ஷித்து அடக்கி யாளுகின்ற] விமலா—மாசற்ற ஸ்வபாவ முடையோனே! [இத்தால் 'வைஷம்ய நைர்க்ருண்யே ந...ஸாபேக்ஷத்வாத்' என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் நிர்ணயத்தை யொட்டிப் பகவான் ஶிஷ்ட பரிரக்ஷணார்த்தம் செய்யும் துஷ்ட நிக்ரஹமானது அவரவர் கர்மாநுகுணமாகப் பலங் கொடுத்துத் திருத்தும் ப்ரக்ரியையில் சேர்ந்த தாகையால், பக்ஷபாதத்தினாலாவது தயை யில்லாமையாலாவது அப்படிச் செய்கிறாரென்று சொல்லப் பொருந்தாதென்றும், அவருடைய மாசற்ற தூய்மையே இத்தால் ப்ரகாஶிக்கிற தென்றும் அபிப்ராயம்.] துயில் எழாய்—நீ விழிக்கவேண்டும். [விமலன்—நித்ரையாகிற மலத்தில் உழல்வது உசிதமல்ல வென்று ஸூசிதம். இவ்வகையான தம் வேண்டுகோள் ஸித்தி பெறுவதற்காக மறுபடியும் புருஷகார ப்ரார்த்தனை செய்கிறார்.] செப்பு என்ன மெல் முலை—ஸ்வர்ண கலஶம்போல் வர்த்துலமாகவும் உந்நதமாகவும் இருக்கிற ஸுகுமார ஸ்பர்ஶமுடைய ஸ்தநங்களையுடைய, செவ்வாய்—சிவந்த திருவதரத்தையுடைய, சிறு மருங்குல்—சிறுத்த இடையையுடைய, நப்பின்னை நங்காய்—நப்பின்னைப் பிராட்டியே! திருவே—மஹாலக்ஷ்மிக்கு ஸமாநமானவளே! துயில் எழாய்—நீ நித்ரையை விட்டு எழவேண்டும். [உன்னுடைய ரூப ஸம்பத்தைப் பார்த்தால் நீ ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே யென்று சொல்லக்கூடியதாயிருக்க, நீ இம்மாதிரி அலக்ஷ்மீகரமாய் உறங்கிக் கிடப்பது ஸ்வரூப விருத்தமன்றோ என்று தாத்பர்யம். மேலும் நீ இப்போதே ப்ராத: காலத்தில் செய்யவேண்டிய மங்கள கார்யம் ஒன்று முக்யமானதாக இருக்கிறபடியால் அதைக் குறித்தும் இப்போது உனக்கு நினைப்பூட்டுகிறோம். அதாவது: 'உக்கமும்..........நீராட்டு'] உக்கமும்—திருவாலவட்டமும், தட்டொளியும்—கண்ணாடியும், தந்து—(எங்களிடம்) கொடுத்து, இப்போதே—இப்பொழுதுதானே, உன் மணாளனை—உன் காந்தனுக்கும், எம்மை—எங்களுக்கும், நீராட்டு—அவப்ருத ஸ்நாநத்தைப் பூர்த்தி செய்துவைக்க வேணும். ஏல் ஓர் எம்பாவாய்——. [இன்று எங்களுடைய

வ்ரதம் முடிவு பெறுகையால், அவ்வ்ரதத்துக்கு உத்தேச்ய தேவதையான உன் ப்ரியதமனை அழைத்துவந்து அவப்ருத ஸ்நாநம் செய்வித்து, அவனுடன் நீயும் அவப்ருதம் கண்டருளி, பிறகு உங்களுடைய ப்ரஸாதமாக நாங்களும் அவப்ருத ஸ்நாநம் செய்யும்படி நீ புருஷகாரமாய் நின்று நிர்வஹிக்கவேண்டும். அந்த அவப்ருதத்துக்கு வேண்டிய உபகாரணங்களாகிய விசிறி கண்ணாடி முதலியவைகளை எங்களிடம் கொடுத்து, அவைகளைக்கொண்டு உங்கள் இருவருக்கும் ஸமுசித கைங்கர்யங்களை நாங்கள் செய்து க்ருதார்த்தர்களாக வேண்டும் என்று கருத்து. தட்டொளி—முற்காலத்தில் வெங்கலத் தட்டை நன்றாய்த் துலக்கிச் சுத்தம் செய்து, பளபளவென்று ப்ரகாசிக்கும் அதன் உட்பாகத்தைக் கண்ணாடியாக உபயோகப்படுத்தி வந்ததாலும், அதை அநுஸரித்தே கோயில்களில் திருமஞ்சந காலத்தில் தட்டை உபசாரமாகக் காண்பிக்கும் ஸம்ப்ரதாயம் ஏற்பட்டிருப்பதாலும் 'தட்டொளி' என்று ப்ரயோகிக்கப் பட்டது.] [தொடரும்.]

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகளின் நியமநப்படி, 17—4—48 சனிக்கிழமை ஸ்ரீராமநவமி மஹோத்ஸவ தினத்தில், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் முதலிய எம்பெருமான்களுக்கு ஸ்ரீ அஹோபில மடத்தில் விஶேஷ திருமஞ்ஜநமும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் யதாக்ரமம் நடந்தேறியது.

*   *   *   *

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வ. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஷை ஸபையைச் சார்ந்த புஸ்தகாலயத்துக்கு ஸுமார் ரூ. 60 மதிப்புள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகங்களும், கோரக்பூர் கீதா ப்ரெஸ் எடிடர் ஸ்ரீஜத் ஹநுமான் ப்ரஸாத் போத்தார் அவர்கள் 10 ப்ரதிகள் ஸ்ரீ பகவத் கீதை ஸ்ரீ கோஶங்களும் இலவசமாக அளித்தனர். தவிர: நீடாமங்கலம் P. T. அண்ட் ஸன்ஸ் ரைஸ்மில் முதலாளி அவர்கள் பீரோ ஒன்று நன்கொடையாக அளித்தார். மேற் கூறிய பெரியோர்களுக்கும், மற்றும் எமது நூலிலயத்துக்கு அன்பு மேலிட்டால் இலவசமாக அளித்துவரும் பத்ரிகாதிகாரிகளுக்கும் ஷை ஸபையின் சார்பில் எனது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடாம்பி. R. நரஸிம்ஹ தாஸன்

(கார்யதர்சி.)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

நிகழும் ஸர்வதாரி௵ ஆடி௴ 6௳ (21—7—48) புதன்கிழமை யன்று, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் திருவெவ்வுளூரில் நடக்கிறது.

* * * * *

ஸாமோபாயத்தின் நிலை

பிறரிடம் நாம் வ்யவஹரிக்கும் ரீதியும், அவர்கள் விஷயத்தில் நாம் நடந்துகொள்ளும் ப்ரகாரமும், சிற்சில ந்யாயங்களுக்கு ஒத்திருக்கவேண்டுமென்பதை நாம் எல்லாரும் அறிவோம். அந்த ந்யாயங்களுக்குள் ப்ரதாநமானது, வ்யவஹாரங்களில் ஸம்பந்தப்பட்டிருக்கும் வ்யக்திகளின் அதிகாரி பேதமே. ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் இவைகளில் யதாவஸ்திதமான நிச்சய புத்தியையுடைய முமுக்ஷுக்களுக்குப் பரிபவாதிகளில் க்லேஶப்படுவதும், பய ஸ்தாநங்களில் பயப்படுவதும் உபபந்நமாகமாட்டா. ராக த்வேஷாதிகளில் ஸம்பாவிதமா யிருக்கும் ஸம்ஸாரிகள் விஷயத்திலோ வென்றால், க்லேஶப்படுவதும் பயப்படுவதும் ஸஹஜமே. பரர்கள் அவர்கள் மீது குற்றம் சொன்னால், அந்தக் குற்றம் தமது ஸ்வரூபத்தில் தட்டாதென்னும் எண்ணம் இவர்களுக்கு உண்டாகுமோ? பகவத் ஸங்கல்பத்தால் எதாவது ஓர் அநிஷ்டம் வரும்போ லிருந்தால், அதை விலக்க ப்ரயத்நப்படாமல், அவைகளை அநுபவித்தே தீரவேண்டும் என்னும் புத்திதான் ஸம்ஸாரி சேதநர்க்கு ஜநிக்குமோ? முமுக்ஷுக்களாக இருக்கும் அதிகாரிகளுடைய நடவடிக்கை வேறு; ஸம்ஸாரிகளாகிற அதிகாரிகளுடைய நடவடிக்கை வேறு. வஸ்து ஸ்திதி இப்படியிருக்க, நம்முடைய இக்காலத்துப் பெரியோர்கள் அதி

காரங்கள் ஒன்றையும் பாராமல் எல்லாரும் எப்பொழுதும் எந்த ஸந்தர்ப்பத்தி லும் ஸாமோபாயத்தையே தழுவவேண்டு மென்று உபதேஶிக்கிறர்களே! இது உசிதமாகுமா? துர்ஜ்ஜநர்கள் விஷயத்தில் ப்ரீதி ஆதரம் இவைகளைக் காட்டு வதும், அவர்களுக்கு ஹிதத்தை உபதேஶிக்க ப்ரயத்நப்படுவதும், நமது இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கு மென்று எதிர்பார்க்கக் கூடுமோ?

“ 𑌉𑌪𑌦𑍇𑌶𑍋 𑌹𑌿 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍋𑌪𑌾𑌯 𑌨 𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 ’

[மூர்க்கர்கள் விஷயத்தில் ஹிதோபதேசம் கோபத்தை ஜநிப்பிக்குமே யொழிய ஶாந்தியை ஒருபொழுதும் ஜநிப்பிக்கமாட்டாது] என்று நீதி அறிந்தவர்கள் சொல்லியிருக்கிறர்கள். இதைக் கவனியாமல் நமது பெரியோர்கள், ‘உக்ர மான வ்ருத்தியை ஒருபோதும் கைப்பற்றதே’ என்று உபதேஶம் செய்கி றர்கள்; ஸ்வயமும் அநுஷ்டித்துக் காட்டுகிறர்கள். இது புத்திமத் கார்ய மாகுமா? இவ்வாறு எப்பொழுதும் ஸாமோபாயத்தைக் கைப்பற்றி நடப்பது, ஜநங்களுடைய பரிபாலநத்தை முக்ய தர்மமாகவுடைய அரசர்கள் விஷயத்தில் அத்யந்தம் அஸங்கத மன்றே? பகை யரசர்கள் படை யெடுத்து வருங் காலத்தில் நாம் எதிர்த்து யுத்தம் செய்யாமல் ‘ஸத்யாக்ரஹம்’ என்னும் உபாயத்தைக் கைப்பற்றினல், கத்தியும் கையுமாக வரும் பகைவர் நமது தலையைச் சீவிவிட்டன்றே போவார்கள்? ப்ரஜைகள் பகைவரால் ஹிம்ஸிக்கப் பட்டார்களே யானல், அப்படி அவர்கள் நாஶமடையும்படி அரசர்கள் பார்த்துவருவது தர்மமாகுமா? ஸ்ரீ கீதாசார்யனும் அர்ஜுநனை அவனது தர்மமாகிற யுத்தத்தைச் செய்யச் சொல்லி உபதேஶிக்கும் பொழுது, முதலில் ஸ்வதர்மமாகிற யுத்தத்தைச் செய்யாவிட்டால் த்ருஷ்டா த்ருஷ்ட பலஹாநி ஸம்பவிக்குமென்று சொல்லி, பிறகு அத்ருஷ்ட ப்ரத்யவாயமும் நேருமென்று சொல்லவில்லையா?

“ 𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌤𑌤𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ ”

[(அர்ஜுநா!) நீ ஸ்வதர்மமாயிருக்கும் யுத்தத்தைச் செய்யாமல் விட்டுவிட் டால், ஸ்வதர்மாநுஷ்டாநத்தால் கிடைக்கக்கூடிய பலத்தை இழப்பது மாத்ர மின்றிக்கே நிரதிஶயமான பாபத்தையும் அடைவாய்] என்றன்றே அவர் உபதேஶித்திருக்கிறர்? அதற்கு விருத்தமாக நாம் உபதேஶிப்பதும் அநுஷ்டிப் பதும் ந்யாய்யமாகுமா?

ப்ரக்ருதத்தில் ஹைதராபாத் ராஜ்யத்துக்கும் இந்தியா ராஜ்யத்துக்கும் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டிருப்பதன் காரணமாக, அந்த ராஜ்யங்களின் எல்லை ப்ராந்தங்களில் பற்பல அட்டூழியங்கள் நடக்கின்றன வென்று பத்ரிகை களினின்று அறிகிறேம். அநேக ஜநங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டுக் காடுகளுக்கு ஓடுகிறர்களாம். க்ராமம் க்ராமமாகக் கொள்ளைகள் நடக்கின்றன வாம். அநேக க்ராமங்களில் வீடுகள் தீக்கு இரையாகிச் சாம்பலாகி விட் டனவாம். ஸ்த்ரீகள் படும் கஷ்டம் வாசமகோசரமாம். ‘இந்த அக்ரமங்கள்

நடவாவண்ணம் ஏன் ராஜாங்கத்தார் நடவடிக்கைகளை நடத்தக்கூடாது? இந்த துஸ்ஸ்திதிக்குக் காரணமான துர்ஜ்ஜநங்களை ஏன் சிக்ஷிக்கக் கூடாது? இந்த அட்டூழியங்களுக்கு அந்தந்தத் தேசத்து அரசர்களுடைய தூண்டுதலே காரணமானால், அந்த அரசர்களை சிக்ஷிக்க ஏன் யுத்தம் ஆரம்பிக்கக்கூடாது? இந்தக் கஷ்டகாலத்தில்கூட ஸாமோபாயத்தை அவலம்பித்திருக்கக்கூடுமா?' இத்யாதியான சங்கைகள் அநேக ஜநங்களுடைய மநஸ்ஸில் இப்போது எழுகின்றன.

இந்த சங்கைகளே நம்மையும் ஒருகாலத்தில் பாதித்தன. இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபொழுது மநு ஸ்ம்ருதியிலுள்ள இரண்டொரு வாக்யங்கள் நமது நினைவுக்கு வந்தன. அவைகளைக் கவனித்தபோது நமது முக்ய மந்த்ரியான ஸ்ரீமான் நேரு செல்லும் மார்க்கம் சாஸ்த்ரத்துக்கு ஒத்ததென்பதை நாம் அறிந்தோம். மநு ஸ்ம்ருதியில்,

“ 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌭𑍇𑌦𑍇𑌨 𑌸𑌮𑌸𑍍𑌤𑍈𑌰𑌥𑌵𑌾 𑌪𑍃𑌥𑌕𑍍 ।
𑌵𑌿𑌜𑍇𑌤𑍁𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍇𑌤𑌾𑌰𑍀𑌨𑍍 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇𑌨 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥
𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌪𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑌂𑌭𑌵𑍇 ।
𑌤𑌥𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑍇𑌤 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍋 𑌵𑌿𑌜𑌯𑍇𑌤 𑌰𑌿𑌪𑍂𑌨𑍍𑌯𑌥𑌾 ॥ ”

[ப்ரீதி ஹிதோபதேசம் முதலிய ஸாமோபாயத்தாலாவது, சத்ருக்களுக்கு த்ருப்தியைக் கொடுக்கும் ஹிரண்யம் முதலியவைகளைக் கொடுப்பதாகிற தாநோபாயத்தாலாவது, சத்ருக்களைச் சேர்ந்த ஜநங்களுக்குள் கலஹத்தை உண்டுபண்ணக்கூடிய பேதோபாயத்தாலாவது, இவை தனித்தனியாகப் பலியாவிட்டால் மூன்றையும் சேர்த்து ப்ரயோகம் செய்வதாலாவது, சத்ருக்களை ஜயிப்பதற்கு ப்ரயத்நப்படுவதே ச்லாக்யமான மார்க்கம். யுத்தமாகிற தண்டோபாயம் வேண்டாம். ஆனால் கீழ்க் கூறப்பட்டுள்ள உபாயங்கள் பலியாமற் போனால் சத்ருவை ஜயிப்பதற்கு வேண்டும் ஸந்நாஹத்துடன் யுத்தத்தில் ப்ரவர்த்திக்கலாம். உபாயாந்தரங்கள் பலிக்கும் போலிருந்தால் யுத்தத்தைப் பரிஹரிப்பதே உசிதம்] என்னும் க்ரமம் போதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் நேரு த்வரையுடன் ப்ரவர்த்தியாமல் கொஞ்சம் விளம்பிப்பது இதற்கு ஒத்திருக்கிறபடியால், அவர் போகும் மார்க்கம் சரியான மார்க்கமென்றே நாம் நினைக்கிறோம். சீக்ரத்தில் ஒரு நிர்ணயம் ஏற்பட்டு விடுமென்றும் நம்புகின்றோம்.

*   *   *   *

சேட்டிப்புண்யத்தில் ஸ்ரீ தேவநாதன் மஹோத்ஸவம்

சிங்கப்பெருமாள் கோயிலை அடுத்த சேட்டிப்புண்யம் என்னும் க்ராமத்தில், சென்ற மாஸத்தில் அத்யத்புதமான பகவதுத்ஸவம் ஒன்று நடைபெற்றது. அந்த ஸ்தலத்தில் அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவநாதன் நூறு வர்ஷங்களுக்கு முன் திருவஹீந்த்ரபுரத்திலிருந்து அவ்விடத்துக்கு எழுந்தருளப்பண்ணப்பட்டாரென்றும், அது ஸம்பத்தமாக நூறுவது ஆண்டு முடியும் இவ்வர்ஷத்தில் பெரியதோர் உத்ஸவத்தை அந்த எம்பெருமானுக்குக் கண்டருளப்பண்ணவேணுமென்று அவ்விடத்திலுள்ள பாகவதோத்தமர்களுக்கு ஒரு அபிஸந்தி ஜநித்ததே

இந்த உத்ஸவத்துக்கு ப்ரவர்த்தகமென்றும் நாம் அறிகிறோம். பகவதாராதநத்துக்குக் கால நிர்ப்பந்த முண்டோ? ஆராதிக்கவேண்டுமென்னும் அபிஸந்தி ஜநிக்கிற காலமே அவன் திருவுள்ளத்துக்கு உகந்த காலம்.

இந்த உத்ஸவம் அந்த ஸ்தலத்தில் பத்துத் திநங்கள் நடைபெற்றது. அப்போது அநேக வைதிக வித்வான்களும் லௌகிக ப்ரபுக்களும் எழுந்தருளியிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் வேதபாராயணம் திவ்ய ப்ரபந்த ஸேவை முதலிய கைங்கர்யங்கள் நடைபெற்றன. வேதாந்த விஷயமான உபந்யாஸங்களும் சிறந்த வித்வான்களால் அநுக்ரஹிக்கப்பட்டன. ஸம்ஸாரி ஜநங்களும் பகவத் ஸேவார்த்தம் ஏராளமாக வந்திருந்தனர். அவர்களுக்கு த்ருப்தியைக் கொடுக்கக்கூடிய கதைகளும் காநங்களும், அவையவைகளில் தேர்ச்சி பெற்றவர்களால் நடத்தப்பட்டன. ததீயாராதநம் எவ்வித குறைபாடுமின்றி வெகு விமர்சையாக நடைபெற்றது. அவ்விடத்திலுள்ள அந்ந ஸம்ருத்தியை நாம் நினைக்கும்போது,

"ப்ராஹ்மணா புஞ்ஜதே நித்யம் நாதவந்தஶ்ச புஞ்ஜதே ।
தாபஸா புஞ்ஜதே சாபி ஶ்ரமணா புஞ்ஜதே ததா ॥"

என்னும் ஸ்ரீ ராமாயண ச்லோகமும், 'அட்டுக் குவி சோற்றுப் பருப்பதமும் தயிர் வாவியும் நெய்யளறும்' என்னும் ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செயலும் நமது நினைவிற்கு வந்தன. இவை யெல்லாவற்றையும் காட்டிலும் அதிசயித்திருந்தது பெருமாளுடைய திவ்ய மங்கள விக்ரஹ ஸேவை. அந்தப் பெருமாளின் ஸௌஷ்டவ ஸௌந்தர்யாதிகள் அத்யத்புதம். அங்கே ஸேவார்த்திகளாகப் போயிருந்த ஜநங்கள் எல்லோரும் பத்துத் திநங்கள் ஸம்ஸார க்லேசங்களை மறந்து, கேவலம் ஆநந்த விசேஷத்தை அநுபவித்து வந்தார்கள். 'யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:' என்னும் ஸ்தாந ப்ராப்தி தானே நமக்குப் பரம புருஷார்த்தம்? இம்மாதிரியான உத்ஸவம் ஸார்வகாலிகமாக ஸர்வத்ர நடந்துவந்தால், 'வைகுண்ட வாஸேபி ந மே அபிலாஷ:' என்று என் நாம் சொல்லக்கூடாது?

இவ்வளவு சிறப்புடன் இந்த உத்ஸவத்தை நடத்திவைத்த பெருமை, ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் அந்யாத்ருசமான உத்ஸாஹத்தை நைஸர்க்கிகமாகப் பெற்றிருக்கும் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்காருடையதே. அவரே முன்னின்று முற்றும் இந்தக் கைங்கர்யத்தை இவ்வாறு நடப்பித்தார். அவர் ஒரு பகவத்ப்ரியர். அவருக்கு இம்மாதிரியான ப்ரவ்ருத்திகளைக் கொடுத்து, அவைகளை ஸகல விதத்திலும் பரிபூர்ணமாக இருக்கும்படி ஸாமக்ரிகள் எல்லாவற்றையும் உபஸ்தாபநம் செய்வித்து, அதனால் ஒரு முகோல்லாஸத்தைத் தான் அடைவதில் அவனுக்கு ஒரு த்ருப்தி. நிமித்த மாத்ரமாக இருந்தாலும் அந்த பாக்யம் பார்த்தனுக்குக் கிடைத்ததே ஒழிய இதரர்களுக்குக் கிடைத்ததோ? 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' என்றன்றோ ச்ருதி சொல்லுகிறது? அம்மாதிரி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியையும் வரித்திருக்கிறானென்றே நாம் ஊஹிக்கிறோம். அந்த வரணம் அவருக்கு ஸகல ச்ரேயஸ்ஸையும் கொடுக்குமென்பதே நமது நம்பிக்கை.

கிளி:—பெண்ணே! உன்னுடைய புது அரண்மனையின் தோட்டங்களில் பழுத்துக் குலுங்கும் பழவகைகளைக் கண்டேன். அவைகளை வயிறாரப் புசித்து ஸௌக்யமாய் வஸிப்பதின்பொருட்டு வந்தேன்.

வாஸ:—உனக்கு அஹோபிலத்தில் வஸிப்பதில் என்ன தொந்தரவு நேரிட்டது?

கிளி:—பகவான் முன்போல் என்னைக் கவனிப்பதில்லை; பாலும் பழமும் ஊட்டுவாரில்லை; போஷணையும் குறைந்துவிட்டது. என்னுடன் கொஞ்சிக் குலாவுவார்களில்லை.

வாஸ:–அதற்கு என்ன காரணம்? திடீரென்று ஏன் இவ்வித மாறுதல்?

கிளி:–விரஹத்தினால்.

வாஸ:–[அவஸரமும் அஸூயையும் தோன்றியவளாய்] அவ்விரஹம் எவரால் எற்பட்டதோ?

கிளி:— உன்னால்தான். அதற்கென்ன ஸந்தேஹம்?

வாஸ:— எனக்கு எங்கு அவ்வத்ருஷ்டம் உள்ளது?

விது:— தேவா! கேட்கவேண்டியதெல்லாம் கேட்டாயிற்றல்லவா?

பகவான்:–[நம்பிக்கையும் குதூஹலமுமுடையவராய்] ஒ மனமே! ஏன் அங்குமிங்கும் அலைந்து திரிகிறாய்? உன்னுடைய இருப்பிடமாகிய அந்தரங்கத்தை விட்டு அசையாமலிருக்கக்கடவாய். நமக்கினி என்ன குறை? தெய்வம் ஸந்தோஷித்து வெற்றியைக் கொடுக்கும் தறுவாயில் உள்ளது. பஞ்சேந்த்ரியங்களும் ஆநந்த வெள்ளத்தில் நீந்தலாம். மந்மதன், சந்த்ரன், வஸந்தன் மூவரும் சேர்ந்து என்மேல் காதல்கொண்ட இப்பெண்மணியை விரஹாக்நி குண்டம்போல் ஜ்வலிக்கும் என்னிடத்தில் பலவந்தத்தால் பிடித்துத் தள்ளுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றனர்.

ப்ரமரிகா:— ஸகி! பூஜ்யையாயிருக்கும் அவ்விஜ்ஞாநவதி உண்மையையே புகன்றாள். இப்பொழுது கிளி சொல்லுவதும், அவள் சொல்லியதும் ஒன்றாகவே இருக்கின்றன.

வாஸ:— ஆம் தோழீ! என்னை ஸமாதாநம் செய்வதற்கு எவ்வளவு சாக்கு உன்னிடத்தில் உள்ளது?

பகவான்:— [குதூஹலத்துடன்] ஆஹா! என்னால் ஜயிக்கப்பட்டது. மீன்கொடியையுடைய அரசனான மந்மதனை ஜயித்தேன்ஜயித்தேன். இப்பொழுது என்னுடைய தவம் பலித்தது. என்பால் தெய்வத்திற்கு க்ருபை பிறந்தது.

யார் ஆசைப்படினும் கிடைப்பதற்கரிய அவள் தானகவே என்னுடைய சேர்க்கையை விரும்புகிருள்.

விதூ:— இவை அனைத்திற்கும் ஆதிகாரணம், அவளுடைய எண்ணத்தை ஆசை காட்டி வஞ்சனை செய்த தாங்கள் ஒருவர்; அன்புள்ள தம்பதிகளின் பிரிவைப் பொறுக்காத மன்மதன் ஒருவன்.

பகவான்:— [சற்று ஆலோசித்து ஸந்தோஷத்துடன்] கூர்மையாயிருக்கும் கடைக்கண் பார்வையாகிற அம்புகளினல் என்னுடைய மனத்தைக் கடையும் ரதி விலாஸங்களைச் செய்யும் ஸாமர்த்யமுடையவள்; என்னுடைய தைர்யத்தை வஞ்சனை செய்து அபஹரிப்பவள்; பார்த்துக்கொண்டிருக்கும் போதே என் உள்ளத்தை அபஹரித்த கள்ளி; இப்படிப்பட்ட பெண்மணி என் கண் எதிரில் புலப்படுகிருள்.

விதூ:— தேவா! இவை அனைத்தும் எவ்விதம் கிடைத்தது? நான் ப்ராஹ்மண னல்லவா? ஆகவே என்னுடைய ஆசிர்வாத பலத்தினல் அல்லவோ உம்முடைய மனோரதம் ஈடேறும் தருணம் நேர்ந்தது? அதை ஒருகாலும் மறக்கலாகுமோ?

பகவான்:— [மறுபடியும் யோசித்து] இப்பெண்கொடி நான் முன் பார்த்ததுபோலவே தென்படுகிருள். மன்மதனுடைய தநுர்வேத வ்யாபாரத்தில் கரைகண்டதான அவள் கடைக்கண் பார்வை அதுவேதான். அம்ருதத்தினுடைய அலைகளில் விளையாடுவதில் ஸாமர்த்யமும் சோம்பலு மில்லாத தேன் ஒழுகும் பேச்சுக்கள் அவை. நான் முன்கேட்ட அதே இனிய குரல். முன் கண்ட பருத்து அழகாய் விளங்கும் ஸ்தநங்கள். அதிகம் கூறுவதி லென்ன? எவை யெவைகளை முன்பு பார்த்தேனே அவைகளில் ஒன்றும் மாறுத லில்லை. ஆனல் ஆச்சர்யம்! தேஹத்தில் மட்டும் புதிய ஒரு வெண்மையும் காந்தியும் தனிச் சிறப்புடன் காணப்படுகின்றன.

விதூ:— ஸ்வாமீ! போதும் போதும் வர்ணனையில் ஆழ்ந்தது. கால விளம்ப மாகிறது. அவள் எதிரில் செல்லக்கடவீர். அக்கிளி பறந்துவிடும். மறுபடியும் ப்ரலாபந்தான்.

பகவான்:— நண்பா! வாஸ்தவம். அவ்விதமே யாகட்டும். [மரத்தின் மறைவிலிருந்து வெளியில் வந்து எதையோ தேடுவதுபோல் நடிக்கிருர். பிறகு] ஆஹா! நண்பா! எவ்வளவு வநங்களைக் கடந்து இவ்விடம் வந்துவிட்டோம்! [இதைச் செவியுற்ற அனைவரும் பரபரப்புடன் ஆச்சர்யம் அடைந்தவராய்ப் பகவானையே உற்று நோக்குகிருர்கள்.]

சதுரிகா:— ஸகீ! இந்நாளே நன்னுள். உனது அத்ருஷ்டம் பலத்தைக் கொடுக்கக்கூடிய ஸமயம் நேர்ந்தது. இதோ பார்; திருமார்பில் விளங்கும் அநேக ஆபரணங்கள்; மூவுலகும் ஒளிவீசும் கௌஸ்துப மணி; ஸர்வ மங்கள

தேவதையாகிய ஸ்ரீ தேவி; அவள் வீற்றிருக்கும் கமலத்தில் தேனைப் பருகும் ஆசையுடன் வட்டமிடும் கருவண்டுக்கு ஸமமாகத் திகழும் ஸ்ரீவத்ஸம்; என்றும் ஜகஜ்ஜோதியாய் மின்னும் தங்கக் கம்பியினால் நெய்த பீதாம்பரம்; நீருண்ட மேகம் போன்ற புதிய காந்தியுடைய திருமேனி. இவைகளையுடைய இதோ தென்படும் புருஷன் அம்மஹாநுபாவன்தான்.

ப்ரமரிகா:— சதுரிகே! ஆம்; உண்மை. இவளுடைய ஸ்வப்நத்தில் மோசம் செய்தவனைப் பார்த்து இவள் நமக்கு எவ்விதம் வர்ணித்தனளோ அதே போலிருக்கிறது இப்போது காணப்படும் இவருடைய திவ்யாலங்காரம்.

சதுரிகா:— தோழி! வாஸந்திகே! இதோ உனது ப்ராணவல்லபர். தமது கிளியைப் பின்தொடர்ந்து வந்த வ்யாஜத்தைக்கொண்டு கிளியையும் சாரிகையையும் பழிக்கும் உன்னையே அபேக்ஷித்து வந்துளர். ஆகையினால் அவர் முன் சென்று அவர் வருகையைக் கௌரவித்து ஸத்காரம் செய்யக்கட வாய்.

பகவான்:— சதுரிகா ச்லாக்யமாய்க் கூறினள். இப்பெண்மணி கிளியையும் சாரிகையையும் பழிக்கும் தன்மையள்தான் என்பதில் எவ்வளவும் பிசகில்லை. ரொம்ப பொருத்தமே. அவள் கூந்தலோ கறுப்பு; ஸ்தந பாகங்களின் நுனியில் பச்சை; பற்களில் வெண்மை; அதரங்களில் சிவப்பு; சரீரத்தில் மஞ்சள். இத்தகைய பஞ்சவர்ணக் கிளியானது என்னுடைய மனமாகிற பஞ்சரத்தை அடைந்து ஆநந்தமாய் வஸிக்கிறது.

வாஸ:— தோழி! சதுரிகே! இதுவா உன்னுடைய சாதுர்யமாகிய பரிஹாஸப் பேச்சுக்களுக்கு ஸமயம்? ஹாம்! உன்னை நிந்திப்பானேன்? நீ என்ன செய்வாய்? எவர் எனது ஸ்வப்நத்தில் ஆரம்பித்துப் போவதும் வருவதுமாய் மோசம் செய்கிறாரோ அப்புருஷனை யல்லவோ நிந்திக்கவேண்டும்?

விதூ:— ஸ்வாமீ! இவள் பலவிதமாய்த் தங்களால் வஞ்சிக்கப்பட்டாள். ஆகவே கண்ணெதிரில் தோன்றி நிற்கினும், தங்கள்மேல் நம்பிக்கை பிறக்கவில்லை. இப்பொழுது கூட தங்களை 'ஸ்வப்நத்தில் கண்ட அவர்' என்று குறிப்பிட்டே பேசுகிறாள்.

பகவான்:— [அவஸரமும் பயமும் ஆவலும் கொண்டவராய்] ஹா! கஷ்டம். இப்பொழுது என்ன செய்வது? என்னுடைய மநோரதமானது வேதனையாகிற சேற்றி லல்லவோ மூழ்கிக் கிடக்கிறது?

விதூ:— என்ன செய்வது? தெரிந்த ஸமாசாரம்தான். தாஸனைப்போல் ஆசரிப்பதன்றி வேறு என்ன வழி?

பகவான்:—[ஆராக் காதலுடன் அவள் ஸமீபம் சென்று] வாஸந்திகே! மந்மதனுடைய வைஜயந்தி மாலை போன்றவளே! ஒரு குற்றமும் செய்யாத

காப்பக நூலகம் 189248

தாஸனுகிய என்னிடத்தில் ஏன் நீ குற்றத்தைச் சுமத்துகிறுய்? விளையாட்டி லிருந்து நழுவிய ஹம்ஸமே! உன்னுடைய இரக்கைகளை ஸுகமாய் விரித்துக் கொண்டு என் மனமாகிற மாநஸ ஸரோவரத்தில் ஸுகமாய் வஸிக்கக்கடவாய். ஐங்கணைகளை யுடைய காமதேவனின் பத்தரை மாற்றுத் தங்கப் பதுமையே! எனதுள்ளம் உகக்குமாறு உனது அழகிய விலாஸ ஸஞ்சாரத்தைச் செய்யக் கடவாய். சஞ்சல மற்ற மின்னல் கொடியே! புங்கமரத்தின் அடர்ந்த காந் தியைப் பழிக்கும் என் திருமேனியை அலங்கரிக்கக்கடவாய்.

வாஸ:—[பரமாநந்தம் பொங்க தனக்குள்] இவர் தானே? ஆம்; நிச் யம் அவராகவே தான் இருக்கவேண்டும். எனது ஸ்வப்நத்தில் கபட நாடக மாடியவர் எனது கண்ணிற்கு மாத்ரம் காட்சி யளித்தார். இவரோவென்றுல், தோழிமார்களின் கண்களுக்கு மல்லவோ தோன்றுகிறுர். [கடைக்கண்ணுல் சிறிது நோக்கிப் பின் திரும்பிச் செல்ல இச்சிக்கிறுள்.]

ப்ரமரிகா:—ஏன் புறப்படுகிறுய்? இவர் உன்னுடைய நிந்தைப் பேச்சு களை மறைவிலிருந்து கேட்டிருப்பார் என்ற ஸந்தேஹத்தினுல் பின் திரும்புகிறுய் போலும்.

[வாஸந்திகா ப்ரமரிகாவைக் கடிந்துகொள்பவள்போல் கோணல் பார்வை பார்க்கிறுள்.]

சது:—[வேடிக்கையாய்] தோழி! வநதேவதையின் ஆலயத்தில் கிடைத்த அநுக்ரஹ பத்ரிகை ஆரம்பம். அது முதல் உன் ஹ்ருதயத்தை வஞ் சனை செய்யும் ஸாமர்த்யம் வாய்ந்த அப்பரம நிபுணனை விட்டு, எங்கள்மேல் ஏன் இத்தகைய கோபமும் குடிலமான பார்வையையும்? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்?

விதூ:—ஸ்வாமீ! இதுவே தங்கள் மநோரதம் ஸித்தியடையும் வேளை. இத்தருணம் செய்யவேண்டிய காரியங்களை விரைவில் செய்யக்கடவீர்.

பகவான்:—[அத்யந்தம் ப்ரீதியுடன் கூட வாஸந்திகாவின் கைத்தலம் பற்றி] ஸர்வாங்க ஸுந்தரீ! உன் கைப்பிடித்த நானும் க்ருதார்த்தனுக வேண்டும்; நீயும் தந்யையாகவேண்டும். என்ன உத்தேசத்தால் பின் திரும்பிச் செல்லுகிறுய்? மேலும் என்னுடைய அன்பு நிறைந்த இத்தகைய தீந ஸ்திதியைக் கண்டும் ஏன் போக இச்சிக்கிறுய்? பெண் கொடியே! மந்மதனுடைய நவரத்ந தீபமே! ஆனுல் நீ இவ்விதம் செய்வது ஆச்சர்ய மன்று. பெண்களுக்கு லஜ்ஜையே பூஷண மல்லவா?

ப்ரம:—ஸ்வாமீ! ப்ரிய நண்பனே! இப்பெண்மணியின் தேஹத்திலுள்ள லக்ஷணங்களைச் சற்றுக் கடாக்ஷிக்கவேண்டும். தாங்கள் ஸாக்ஷாத் லக்ஷ்மியின் ஸஹோதரி.

பகவான்:—ஆம்; அதில் என்ன ஸந்தேஹம்? அத்யந்தம் அதிசய மாகிய காந்தியையுடைய ரதீதேவியின் வடிவத்தைப் போன்ற இவளுடைய லக்ஷணங்களைக் கூர்ந்து கவனிக்கவும் வேண்டுமோ? இவள் அடையப்போகும் அத்ருஷ்டத்தைச் சொல்லுகிறேன் கேள். தங்கச் சாமரம், தாமரை மலரினுல் விசிறி, திவ்யமாகிய மாலைகள், திவ்ய ஸிம்ஹாஸநம், ஜ்வலிக்கும் பீதாம்பரம், இவைகளைத் தங்கள் கரகமலங்களில் ஏந்தியவர்களாகிய மங்கையர்கள் இரு புறத்திலும் நின்றுகொண்டு அல்லும் பகலும் அநவரதமும் ஓய்ச்சல் ஒழிவின்றி விதம்விதமாகிய உபசாரங்களைச் செய்யப் போகின்றனர்.

கிளி:—[தனக்குள்] இரு பொருள் கொண்ட பகவானுடைய பத்ய மானது வெகு ச்லாக்யம்.

சது:—ஸகி! உன்னுடைய அங்க லக்ஷணங்களைப் பார்த்து ச்லாக்ய மான பலன்களைக் கூறின இவருக்குப் பஹுமாநமாக உன் அங்கத்தையே தாநம் செய்யக்கடவாய்.

ப்ரமரி:—[மந்தஹாஸத்துடன்] ஆஹா! இதோ இவள் தாநம் செய் வதற்கே ஆயத்தமாயுள்ளாள் என்பது விளங்க வில்லையா? பகவானுடைய பாணிக்ரஹணத்தினுல் கசியும் வேர்வை யென்பது வ்யாஜம். ஆனுல் தாநம் செய்யக் கையில் நிறைந்திருக்கும் தீர்த்தமேதான் அது.

வாஸ:—[தனக்குள்] லஜ்ஜையினுல் ஜயிக்கப்பட்ட எனக்கு எங்கிருந்து வந்தது அப்படிப்பட்ட பாக்யம்?

பகவான்:—[அன்பு ததும்ப வாஸந்திகாவின் முகத்தை நிமிர்த்தி] ஓ பெண்கொடியே! முத்துக்கள் போன்ற சிறந்த பல் வரிசைகளையுடைய உனது திருப்பவளச் செவ்வாயின் அமுதத்தை அருந்த விரும்புகிறேன். பிறகு உன்னை விவாஹம் செய்துகொண்டு உன் மநோபீஷ்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுகிறேன். நுண்ணிடையாளே! எனது மனதானது உன் ஸௌந்தர தநுவை ஆலிங்கநம் செய்துகொண்டு ஸிம்ஹாஸநத்தின்மீது மேரு சிகரத்தின் உச்சியில் வீற்றிருக்கிறது. அம்மநோரதம் இப்போது ஈடேறுமா?

சது:—இது என்ன அளவற்ற வேண்டுதல்? தாங்கள் அறியீர்களா என்ன? தடுக்காமை விருப்பதே ஸம்மதத்திற்கு அடையாள மன்ரோ? [திரைக் குள்] ஆஹா! குழந்தையான வாஸந்திகா இவ்வளவு நேரம் சென்றும் ஏனோ வரவில்லை என்று அன்பு மிக்க தாயுள்ளம் தவிக்கின்றது. என்னைத் தேடிக் கொண்டுவா என்று ஆஜ்ஞாபித்தாள். அடாடா! அத்துஷ்டக்கிளி இழுத்துக் கொண்டு வந்துவிட்டது.

கிளி:—ஆஹா! கஷ்டம். மிகவும் அநர்த்தம் நேர்ந்தது. அவளுக்கும் என்னுடைய வஞ்சனை தெரிந்தல்லவா விட்டது! ஆகையால் இனி இவ

ரிடம் நிற்பது உசித மன்று. [என்று எண்ணிக் கிளி தன் மாயா பலத்தினுல் மறைந்த விட்டது.]

ப்ரம:—ஓஹோ! ராணியின் பரிசாரிகையானவள் ஸமீபத்தில் வந்து விட்டாள். ஆகையால் இவள் போய் வருவதின்பொருட்டு உத்தரவு கொடுக்க வேண்டும்.

பகவான்:—ஆஹா! அதற்கென்ன தடை? செய்யவேண்டிய கார்யத்தில் தாமதிப்பதில் என்ன பயன்?

தோழிகள்:—ஸ்வாமீ! தாங்கள் நினைவில் வைக்கவேண்டியவர்கள் அநேகம் பேர் இருப்பினும், எங்கள் தோழிக்கும் உள்ளத்தில் ஓரிடம் அமைக்க வேண்டுகிறோம். [தோழிகள் மறைகின்றனர். வாஸந்திகா இரண்டு மூன்றடி சென்று, சற்றுப் பின் திரும்பி பகவானைக் கடைக்கண்ணுல் நோக்கி ச்ரமத்துடன் தன் கண்களைத் திரும்பி இழுத்துக்கொண்டு செல்லுகிறுள்.]

பகவான்:—[பேராவலுடன்] கழுத்தைத் திருப்பிக் குறுக்குப் பார்வையினுல் என்னைப் பார்த்து என்னுடைய கண்களில் தன்னுடைய கண்களை நாட்டி எனது தைர்யம் முழுவதையும் அபஹரித்துச் சென்றுள்.

விதூ:—உங்களுடைய முதல் ரஸமாகிய ச்ருங்கார ரஸப் புகழ்ச்சியைச் செவியுற்றவளவில், எனக்கு இண்டாவதாகிய ஹாஸ்ய ரஸம் ஞாபகம் வருகிறது.

பகவான்:—என்னப்பா அது? என்ன ஸமாசாரம்?

விதூ:—மந்மதன் தங்களைக் குறிவைத்து ஐங்கணைகளையும் எய்தான். அது லக்ஷ்யம் தவறிப் பயனற்றதாகிவிட்டது. பார்த்தான் அங்கிபுணன். தனக்குப் பக்கபலமாய் இப்பெண்மணி இருப்பதை அறிந்தான். அவன் மூலமாய்த் தனது பாணங்களைத் தங்கள்மேல் தொடுத்தான்.

பகவான்:—நண்பா! நன்று கூறினை. மிகவும் ஸந்தோஷம். உண்மையையே உரைத்தாய். என்னுடைய ஞானம் தைர்யம் முதலிய பெரும்படைகளை அப்புண்யவதி லஜ்ஜை என்னும் கவசத்தைத் தரித்துப் பிளந்தது மன்றி, தன்னுடைய கடாக்ஷமாகிற குந்தாயுதத்தினுல் என்னுடைய மனத்தை அடக்கி எடுத்துக்கொண்டு சென்றேவிட்டாள். இப்பொழுது விலையற்ற மாணிக்கங்களை யிழந்த ஸமுத்ரம்போல் இந்த ஸுந்தரி யற்ற இவ்வநமானது விளங்குகிறது. இப்பொழுது இவ்வந வாஸத்தினுல் என்ன பயன்? [மறைகின்றனர்.]

மூன்றும் அங்கம் முற்றிற்று.

நான்காவது அங்கம்

[அரங்கத்தில் இரண்டு வண்டுகள் தோன்றுகின்றன.]

மதுப்ரியா:—ப்ராணநாத! நமக்கு இனி என்ன கதி? தளிர்களின் ஶோபையே ஒழிந்தது. புஷ்பத்திலிருக்கும் ரஸங்கள் எல்லாம் முற்றிலும் உலர்ந்து கிடக்கிறது. மலர் மலர்வதற்கே ஹேதுவில்லை. தளிர்க ளெல்லாம் உலர்ந்து உதிர்ந்துவிட்டது. ஒரு மரத்திலும் பழமே மருந்திற்கும் கிடையாது; கிளைகள் மாத்ரமே மரத்தில் காணப்படுகின்றன. ஆஹா! கஷ்டம்! என்ன துர்த்தசையி லாழ்ந்துள்ளது இத்தேவதைகளின் நந்தவநம்!

ப்ரமரன்:—ஆம்; கருடாசலத்தின் சுற்று முற்றிலு மிருக்கும் வநங்களைத் தவிர்த்து வேறு எங்குத் தான் புஷ்பமும் பழமும் இருக்கின்றன? அந்த வார்த்தையே சொல்வதற்கில்லை.

மது:—அதென்ன காரணம்? எல்லா ருதுக்களும் ஒன்றுகூடி சித்ர வநத்தின் ஸாந்நித்யம் அடைந்துள்ளது என்று பேச்சு உலாவுகிறதே?

ப்ரம:—வேறு என்ன காரணம்? பூஜ்யையான வந தேவதையானவள் பகவான் ந்ருஸிம்ஹனுடைய ஶிஶிரோபசாரத்தின் பொருட்டு ஸகல ருதுக்களும் ஸித்தமாய்ச் சித்ரவநத்தில் காத்திருக்கவேண்டும் என்று கட்டளை யிட்டிருக்கிறாள்.

மது:—அவ்விதமாகில் என் இப்பொழுது கந்தர்வப் பெண்களைக் கொண்டு கால மில்லாத காலத்தில் ஞாநத்தினால் புஷ்பங்கள் ஸம்ருத்தி யடையுமாறு செய்யப்படவில்லை?

ப்ரம:—அநேக விதமாய்ப் பெரியோர்களிடம் கேட்டு ஸந்மதியை அடைந்தவன் கந்தர்வ ராஜன். அவன் மறுபடியும் தான் இழந்த குமாரியைப் பெறுவதன்பொருட்டு லக்ஷ்மியை ஆராதிப்பதற்காகப் பூமியில் அவதரித்திருக்கிறான். வெகு காலமாய்ப் பிரிந்த ராஜகுமாரியைக் காணும் ஆசையினால் கந்தர்வக் கூட்டங்கள் அனைத்தும் அரசனைப் பின்தொடர்ந்தன. ஞாநம் செய்வதற்கு இவ்விடம் எவருளர்?

மது:—ஆம்; ஸகல ஜநங்களுக்கும் குழந்தைகளிடம் இருக்கும் ஸ்நேஹம் தனிச் சிறப்பு வாய்ந்ததுதான்.

ப்ரம:—ஆம்; வாஸ்தவம். நஷ்டமான பொருள் கிடைத்தால் ஆநந்தம் அனைவருக்கும் அதிகம். அதிலும் மறைந்த மக்கள் கிடைத்தா ரென்றால் அவர்கள் ஸந்தோஷிப்பதைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?

மது:—மேலும் தந்தையைக்காட்டிலும் தாய்க்கு மக்களிடத்தில் பதின் மடங்கு ஸ்நேஹம் அதிகம் என்பதையும் கூறுங்கள். கந்தர்வ ராஜமஹிஷி, தன் செல்வமகள் கிடைத்ததைக் கேட்டதுதான் தாமதம்; கன்றைப் பின்

தொடரும் பசுவைப்போல் பறந்தோடி வந்தாள். ஆவலும் அன்பும் மேலெழக் குழந்தையைத் தழுவினள். ஸ்தநங்களிலிருந்து தாரை தாரையாகப் பால் பெருகியது; அத்துடன் ஆநந்தக் கண்ணீரும் கலந்து வெள்ளமாய் ஓடியது.

ப்ரம:—நமக்கு ஸம்பந்த மற்ற பேச்சுகளினல் வீண் பொழுது கழிப்பதில் என்ன பயன்? ஏககாலத்தில் ஸகல ருதுக்களும் ஒன்றுகூடி அலங்கரித்திருக்கும் சித்ர வநத்தை யடைந்து அவ்விடத்திலேயே ஆநந்தமாய் வாழ்வோம்.

[வண்டுகள் மறைந்தன.]

முன்னுரை முற்றிற்று.

[உடனே அரங்கத்தில் மந்மத தாபம் அதிகரித்த பகவானும் வநதேவதையும் தோன்றுகிருர்கள்.]

வநதேவதை:—ப்ரபோ! சற்றுக் கண்திறந்து கடாக்ஷிக்கவேண்டும். இதோ வஸந்தன் வருகிருன். அரசன், குரு, தெய்வம் இவர்கள் முன்னிலையில் வெறுங்கையுடன் செல்லலாகாதல்லவா? ஆகவே பகவானுக்கு ஸமர்ப்பிக்க உபசாரமாகப் பரிமள த்ரவ்யத்தை வாயுதேவன் தலையில் சுமந்து இவனைப் பின்தொடர்ந்து வருகிருன். மேலும் விரியாமல் கூம்பியிருக்கும் தளிர்கள், பகவானுக்கு இருகைகளையுங் குவித்து அஞ்ஜலியை ஸமர்ப்பிப்பதுபோல் விளங்குகின்றன.

பகவான்:—ஸரிதான்; சித்திரை மாதம் என்னும் ஜோஸ்யன் தோன்றினன் போலும். அவன் காமதேவனுடைய சாஸ்த்ரச் சுவடியைப் பிரித்து வைத்துக்கொண்டு அம் மந்மதனுடைய குணங்களை விரிவாய் ப்ரஸங்கம் செய்கிருன். அதைக் கேட்ட வழிப்போக்கர்களான விரஹி ஜநங்கள் தாரை தாரையாய்க் கண்ணீர் விடுகிருர்கள். [மறுபடியும் யோசித்து] அடடா! என்ன கஷ்டம்! ஶிஶிர ருதுவின் ஸஞ்சாரம் அடங்கியது என்று ஸூசிக்கின்றன கோகிலங்களின் மதுர கானங்கள். அவ்வித பர்வ காலங்கள் பற்பல சென்றன. நாயகிகளைப் பிரிந்த ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு அவ் வஸந்தகால இரவுகள் எவ்விதம்தான் கழிந்தனவோ? ஆகையினல் அத்துஷ்டன் கடின சித்தமுடைய தோழனகிய மந்மதனுடன் சேர்ந்துவரும் இவ்வஸந்தன் வருகையினல் நமக்கு என்ன பயன்?

வநதே:—சரிதான்; ஸ்வாமிக்கு அவன் வருகை ஸ்வாரஸ்ய மில்லை போலும். அவன் வேண்டாம். இதோ தங்கள் முன்னிலையில் க்ரீஷ்ம ருதுவின் அதிதேவதையானவன் மல்லிகை செம்பரத்தை முதலிய மொட்டுகளைக் காணிக்கையாகக் கையில் வைத்துக்கொண்டு கட்டளையை எதிர்பார்த்து நிற்கிருன். சற்றுக் கடாக்ஷிக்கவேண்டும்.

பகவான்:—ஐயோ! இது என்ன கஷ்டம்? சரீர மெங்கும் பற்றி எரிகிறது. 'ஜில்' என்று குளிர்ச்சி தேவை தேவை யென்று தவிக்கும் எனக்கு அதற்குமேல் செந்தணலை வாரிக் கொட்டினதுபோல் அல்லவாயிருக்கிறது இவன் வருகை?

189248

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '48 ஜூன்மீ-த்துச்

சந்தா வஸூல்

				ரூ.	அ.
22	ஸ்ரீ.	M. R. ஆராவமுதையங்கார், பப்பாய்	...	3	0
70	,,	G. ஸ்ரீநிவாஸாசார்யர், கோயம்புத்தூர்	...	6	0
101	,,	K. R. ஸ்ரீநிவாஸராகவையங்கார், மேல் மாம்பலம்	...	6	0
154	,,	K. ஜயாவையங்கார், திருப்பளாத்துறை	...	3	0
155	,,	T. S. நாராயணையங்கார், திருப்பளாத்துறை	...	3	0
165	,,	வாத்யார் R. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
224	,,	T. N. வானமாமலை ஐயங்கார், ராஜபாளையம்	...	3	0
249	,,	L. C. ஸுந்தரவரதாசார்யர். சித்தூர்	...	3	0
373	,,	முத்து விஜயரங்கவெங்கடாசலபதி ரெட்டி, கூட்டேரிப்பட்டு	....	3	0
433	,,	R. S. தாதாசார்யர், படான் வ. குஜராத்	....	3	0
556	,,	K. V. ஸந்தானகோபாலன், கத்வால்	....	1	8
670	,,	T. V. ராஜகோபாலையங்கார், தண்ணீர்ப்பள்ளி	...	3	0
766	,,	K. A. ஸ்ரீநிவாஸையங்கார், கோனேரிராஜபுரம்	....	3	0
779	,,	K. R. ஸௌம்ய நாராயணன், கும்பகோணம்	...	3	0
			மொத்தம் ரூ.	46	8

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0-12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0-12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்-க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8
9.	ஸ்ரீ காமாஸிகாஷ்டகம், ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம் [க்ரந்த லிபி ; தமிழ் உரையுடன்]	0—7	0—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevacharia, 2, Mahalakshmi Street, T yagarayanagar, Madras.

177

177

P.

ஸர்வதாரி ௵
ஆடி ௴

ஸம்புடம்-7
ஸஞ்சிகை-7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JUL 1948
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
N48·7·7.
189248.

July 1948
Vol. 7 No. 7